இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 22 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 14 – வியாழக்கிழமை 31 ஆகஸ்ட் 2023 – மதுரை 12 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 22: Thiruvalluvar Year - 2054 - Aavani 14 - Thursday 31 August 2023 - Madurai 12+8 Pages ₹5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.8.2023) முகாம் அலுவலகத்தில், அண்மையில் அஜர்பைஜான் நாட்டில் நடைபெற்ற FIDE உலக கோப்பை செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் சிறப்பாக விளையாடி இரண்டாவது இடத்தை பெற்று சாதனை படைத்த செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவை பாராட்டி ஊக்குவிக்கும் விதமாக உயரிய ஊக்கத் தொகையான 30 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் நினைவுப் பரிசு வழங்கி, வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பிரக்ஞானந்தாவின் பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அருமையானத் திட்டம்!

### நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் பாராட்டு!

புதுடெல்லி, ஆக. 31 -

முதலமைச்சரின் காலை உணவு திட்டம் மிகவும் அருமையான திட்டம் என்று நாடாளுமன்ற நிலைக்குழு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

தி.மு.க மக்களவை குழு துணைத் தலைவர் கனிமொழி தலைமையிலான ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிலைக்குழுவினர் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளை பார்வையிட்டு வருகின்றனர். இந்த குழுவினர் நேற்று மதுரையில் முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தனர். மதுரை சாந்தமங்கலத்தில் உள்ள மாநகராட்சி பள்ளிக்குச் சென்ற அவர்கள் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு உணவு பரிமாறினர். மாணவ - மாணவிகளுக்கு வழங்கப்பட்ட உணவின் தரத்தையும் அவர்கள் ஆய்வு செய்தனர். உணவு தரமாகவும், அருமையாகவும் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். காலை உணவுத் திட்டம் மகத்தான திட்டம் என்று நிலைக்குழுவில் இடம்பெற்றுள்ள உத்தரபிரதேச எம்.பி. ஷ்யாம் சிங் பாராட்டு தெரிவித்தார்.

**உ.பி. ஜான்பூர் தொகுதி எம்.பி. ஷ்யாம் சிங் பேட்டி!**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த முதலமைச்சரின் காலை உணவு திட்டம் மிகவும் அருமையான திட்டம். பொதுவாக பல தரப்பு குழந்தைகள் இருக்கிறார்கள். இத்திட்டத்தின் மூலம் குழந்தைகள் பள்ளிகளுக்கு வருவது நிச்சயம் அதிகரிக்கும். நானும் குழந்தைகளுடன் காலை உணவு திட்டத்தில் வழங்கப்படும் உணவை சாப்பிட்டேன். மிகவும் தரமாகவும், அருமையாகவும் உள்ளது என்று கூறினார்.

அதே போல் மற்ற உறுப்பினர்களும், தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை பாராட்டினர்.

ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, ஆட்சியர் சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி, மதுரை மாநகராட்சி ஆணையர் பிரவீன் குமார் உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

## “இந்தியா” கூட்டணியின் 3வது கூட்டம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று மும்பை பயணம்!

## இரண்டு நாள் கூட்டத்தில் பங்கேற்கிறார்!

புதுடெல்லி, ஆக. 31-

இந்தியா கூட்டணியின் 3வது கூட்டம் மும்பையில் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. இதில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உட்பட 26 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு எதிராக உருவாக்கப்பட்டுள்ள இந்தியா கூட்டணியில் காங்கிரஸ், தி.மு.க., திரிணாமூல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம், ராஷ்ட்ரிய ஜனதா தளம் உட்பட 26 கட்சிகள் உள்ளன.

இந்நிலையில், இக்கூட்டணியின் முதல் கூட்டம் பீகார் தலைநகர் பாட்னாவில் ஜீன் 23லும், 2வது கூட்டம் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் ஜீலை 18 லும் நடைபெற்றது.



தற்போது 3வது கூட்டம் மகாராஷ்டிரா தலைநகர் மும்பையில் இன்றும், நாளையும் (31, 1.9.2023) என்று இரு தினங்கள் நடைபெறுகிறது.

இதில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உட்பட 26 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று விமானம் மூலம் சென்னையில் இருந்து மும்பை புறப்பட்டு செல்லவுள்ளார்.

இக்கூட்டத்தில், நாடாளுமன்ற தேர்தல் வியூகம், தேர்தலில் மோடி அரசை வீழ்த்துவது, ஒன்றிய பா.ஜ.க., அரசின் மக்கள் விரோத செயல்பாடுகளை மக்களிடையே எடுத்துரைப்பது உள்ளிட்டவைகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், கூட்டணிக்கான லட்சினை இக்கூட்டத்தில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**நிதிஷ் குமார் பேட்டி!**

இந்த நிலையில் பீகார் மாநிலத்தில் நாலந்தா திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தை முதல்மந்திரி நிதிஷ்குமார் திறந்துவைத்தார். அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

‘நாடாளுமன்ற தேர்தல் முன்கூட்டியே நடக்கலாம் என்று நான் கடந்த ஏழு, எட்டு மாதங்களாகவே கூறிவருகிறேன். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை காரணமாக, அதிக தொகுதிகளில் தோல்வி ஏற்படக்கூடும் என்ற அச்சத்தால் ஒன்றிய பா.ஜனதா அரசு அவ்வாறு நடத்தக்கூடும். எனவே, மக்களவை தேர்தலில் பா.ஜனதாவை தோற்கடிக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் அணிதிரள வேண்டும். எனக்கு என்று தனிப்பட்ட லட்சியமோ, ஆசையோ இல்லை. தேர்தலுக்கு முன்பாக, பா.ஜனதாவுக்கு எதிராக அதிகமான கட்சிகளை ஒன்று திரட்ட வேண்டும் என்பதுதான் எனது ஒரே எண்ணம்.

**இந்தியா கூட்டணி மேலும் வலுப்பெறும்!**

எதிர்க்கட்சிகள் இடையே ஒற்றுமையை ஏற்படுத்த நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். மும்பையில் நடைபெறும் 3வது கூட்டத்துக்குப் பிறகு, ‘இந்தியா’ கூட்டணி மேலும் வலுப்பெறும். பீகார் மாநிலத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு முடிவடைந்துள்ளது. அது தொகுக்கப்பட்டு, விரைவில் வெளியிடப்படும். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதில் தாமதம் தொடர்பாக ஒன்றிய அரசு மவுனம் காப்பது ஏன்? இதுகுறித்து பா.ஜனதா தலைவர்கள் வாய் திறக்க வேண்டும்.’ என்று அவர் கூறினார்.

## 14 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

### வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு!

சென்னை, ஆக. 31 -

தமிழ்நாட்டில் 3 நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்றும், 14 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் கோடை காலம் முடிந்திருந்தாலும், இன்னும் அதன் தாக்கம் இருந்து வருகிறது. கடந்த வாரம் வரை தமிழ்நாட்டில் ஆங்காங்கே ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்தாலும், பல இடங்களில் வெயிலே வாட்டி வதைத்தது.

அதன்படி, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், கோவை, நீலகிரி, கடலூர், திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை, தேனி , தஞ்சாவூர், தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்பு இருக்கிறது.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்று ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது.

## உலக கோப்பை போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற

# செஸ் வீரர் பிரக்ஞானந்தாவுக்கு ரூ. 30 லட்சம் பரிசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி வாழ்த்தி பாராட்டினார்!

சென்னை, ஆக. 31 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, உலகக் கோப்பை செஸ் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற பிரக்ஞானந்தா சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அவருக்கு 30 லட்சம் ரூபாய் பரிசுத்தொகையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

முன்னதாக சென்னை விமான நிலையத்தில் பிரக்ஞானந்தாவிற்கு அரசு சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அஜர்பெய்ஜானில் நடைபெற்ற உலகக் கோப்பை செஸ் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற பிரக்ஞானந்தா நேற்று சென்னை திரும்பினார். சென்னை திரும்பிய அவர், முதலமைச்சரின் ஆழ்வார் பேட்டை முகாம் அலுவலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்தார். அப்போது உலகக்கோப்பை செஸ் போட்டியில் தான் பெற்ற பதக்கங்களை முதலமைச்சரிடம் கொடுத்து பிரக்ஞானந்தா வாழ்த்துப் பெற்றார். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், செஸ் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து தமிழ்நாடு அரசின் சார்பில் 30 லட்சம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரக்ஞானந்தாவிற்கு வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொன்னாடை அணிவித்து வாழ்த்து!**

முதல்வர் மு.க.ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்துப்பின் செஸ் விளையாட்டு வீரர் பிரக்ஞானந்தா செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில்,

தமிழ்நாடு அரசு சார்பில் ரூபாய் 30 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்வர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றதில் மகிழ்ச்சி - விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை தமிழ்நாடு அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. இதற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரித்துக் கொள்கிறேன். எனக்கு பொன்னாடை அணிவித்து, வாழ்த்திய அமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

**சென்னை விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு!**

முன்னதாக உலக கோப்பை செஸ் போட்டியில் வெள்ளிப்பதக்கத்துடன் தாயகம் திரும்பிய இளம் செஸ் வீரர் பிரக்ஞானந்தாவிற்கு சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் மேள தாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அஜர்பெய்ஜானில் நடைபெற்ற உலகக் கோப்பை செஸ் போட்டியில் இறுதி போட்டி வரை முன்னேறி அசத்திய இந்தியாவின் இளம் வீரர் தமிழ்நாட்டை சேர்ந்த பிரக்ஞானந்தா, 5 முறை சாம்பியனான முதல் நிலை வீரர் நார்வேயின் மாக்னஸ் கார்ல்சனை எதிர்கொண்டார். டை பிரேக்கர் வரை சென்ற ஆட்டத்தில், பிரக்ஞானந்தா 2வது இடம் பிடித்தார். வெள்ளிப்பதக்கத்துடன் நேற்று சென்னை திரும்பிய பிரக்ஞானந்தாவிற்கு தமிழ்நாடு அரசு சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் மேள தாளம் முழங்க கலை நிகழ்ச்சிகளுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு சார்பில் அதிகாரிகள் மற்றும் மாணவ, மாணவிகள் என பல்வேறு தரப்பினரும் வருகை தந்து பிரக்ஞானந்தாவுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். வரவேற்பை தொடர்ந்து திறந்த வாகனத்தில் அழைத்து செல்லப்பட்டார். விமான நிலையத்தில் பொதுமக்கள் திரண்டு வந்து வரவேற்பு அளித்தது மகிழ்ச்சி அளிப்பதாக பிரக்ஞானந்தா தெரிவித்தார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 31-08-2023

# பா.ஜ.க.வின் முகத்திரையை கிழிக்கும் சி.ஏ.ஜி. - 1

‘இந்தியா’ கூட்டணி பேசும் மக்கள் அரசியலுக்குப் பதில் சொல்ல முடியாத நரேந்திரமோடியும், அமித்ஷாவும், ‘அது ஊழல் கூட்டணி’ என்று சொல்லி திசை திருப்பி வருகிறார்கள். ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊழல் என்பது நாடறிந்தது ஆகும். அந்த நாடறிந்த செய்திக்கு ஆதாரங்கள் வேண்டுமா? இதோ மத்திய தணிக்கைத் துறை அறிக்கை வந்திருக்கிறது. பா.ஜ.க.வின் முகத்திரையை கிழிக்கிறது சி.ஏ.ஜி. அறிக்கை. இந்த அறிக்கையில் ஏழு விதமான திட்டங்களில் நடந்திருக்கக் கூடிய முறைகேடுகள் மட்டுமே அம்பலமாகி இருக்கிறது. ஒவ்வொன்றாக - சுருக்கமாகக் காண்போம்.

**★ அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம்:**

உத்தரப்பிரதேச மாநிலத்தில், அயோத்தியா மேம்பாட்டுத் திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுத்துவதில் மிகப்பெரிய ஊழல் நடந்திருப்பதை சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசு, கடந்த 2015-ஆம் ஆண்டு ஸ்வதேஷ் தர்ஷன் (Swadesh Darshan) திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், இமாச்சலப்பிரதேசம், சிக்கிம், கோவா, தெலுங்கானா ஆகிய 6 மாநிலங்களில் 6 திட்டங்களை அறிவித்தது ஒன்றிய அரசு. 2015 ஜனவரி முதல் 2022 மார்ச் மாதம் வரையிலான இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து, இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் ஆய்வு நடத்தி அறிக்கையை வெளியிட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் இராமாயண நிகழ்வுகள் தொடர்புடைய இடங்களை ஒருங்கிணைத்து சுற்றுலா வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டதுதான் அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம். இத்திட்டத்தைச் செயல்படுத்தியதில் 8 கோடியே 22 லட்சம் ரூபாய் வீணடிக்கப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளது சி.ஏ.ஜி. அயோத்தியா மேம்பாட்டுத் திட்டத்தில் ஒப்பந்ததாரர்களுக்குப் பணி கொடுக்கப்படும் போது, குறிப்பிட்ட அளவு உத்தரவாதத் தொகையை செலுத்தி இருக்க வேண்டும். ஆனால் நிர்ணயிக்கப்பட்டதை விட குறைவான அளவிற்கு இந்த உத்தரவாதத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது.

**உதாரணமாக, 62 கோடியே 17 லட்சம் ரூபாய்க்கு ஒப்பந்தம் எடுத்த ஒரு ஒப்பந்ததாரர், உத்தரவாதத் தொகையாக 3 கோடியே 11 லட்சம் ரூபாய் செலுத்த வேண்டிய நிலையில் வெறும் ஒரு கோடியே 86 லட்சம் ரூபாய் மட்டுமே செலுத்தியுள்ளார். ஆனால் அவருக்கு ஒப்பந்தம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஒப்பந்ததாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட பணிகள் ஒரே செலவினத்தை கொண்டவை என்பதையும் வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை.**

**ஒப்பந்ததாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்ட பணிகளுக்கு 19 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் கூடுதலான செலவு காண்பிக்கப்பட்டுள்ளது. அயோத்தி மேம்பாட்டுத் திட்டப் பணிகளைப் பெற்ற பின்னரே 3 ஒப்பந்ததாரர்களுக்கு ஜி.எஸ்.டி. பதிவு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் ஒரு ஒப்பந்ததாரருக்கு முறைகேடாக 19 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அயோத்தியா மேம்பாட்டுத் திட்டத்தில், பல பணிகளுக்கு, அடிப்படை பணிகள் கூட செய்யப்படாமல் ஒப்பந்ததாரர்களின் கணக்கில் பணம் செலுத்தப்பட்டுள்ளதையும், பல பணிகளுக்குக் கூடுதல் தொகை வழங்கப்பட்டிருப்பதையும் சி.ஏ.ஜி. அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. இப்படி, அயோத்தியா மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தியதில் 8 கோடியே 22 லட்சம் ரூபாய் மக்கள் வரிப்பணம் வீணாக்கப்பட்டிருக்கிறது.**

ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் உத்தரப்பிரதேசத்தில் அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம்போல, கோவாவில் சின்குவேரிம் - அகுவாடா சிறை மேம்பாடு, இமாச்சலப் பிரதேசத்தில் இமாலயன் சர்க்யூட், தெலுங்கானாவில் ஹெரிட்டேஜ் சர்க்யூட், சிக்கிம் மாநிலத்தில் ரங்போ-சிங்டம், மத்தியப் பிரதேசத்தில் புத்த சர்க்யூட் ஆகிய திட்டங்களிலும் முறைகேடு நடந்திருப்பதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை. அதன்படி, மத்தியப் பிரதேசம், இமாச்சலப்பிரதேசம், சிக்கிம், தெலுங்கானா, கோவா ஆகிய மாநிலங்களில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் ஒப்பந்ததாரர்கள் 19 கோடியே 73 லட்சம் ரூபாய் அளவில் முறைகேடாக கணக்குக் காண்பித்து ஆதாயம் அடைந்துள்ளனர் என்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியுள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை. எந்தத் திட்டத்தின் பேரும் புரியவில்லை. புரியாமல் பேர் வைப்பதே சுருட்டுவதற்குத் தானா?

**★ உதான் திட்டம்:**

ஒன்றிய அரசின் “உதான்” திட்டம் தோல்வியில் முடிந்து விட்டது என்பதை சி.ஏ.ஜி. அறிக்கை சொல்கிறது.

நாட்டின் சிறு நகரங்களுக்கும் விமான சேவையை விரிவுபடுத்துவதாகக் கூறி ஒன்றிய அரசு கடந்த 2016 அக்டோபர் 21-ம் தேதி உதான் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. ஏழைகளும் விமானங்களில் பயணிக்கலாம் - நடுத்தர நகரங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் விமான சேவை என்று கூறி ஒன்றிய பா.ஜ.க. அரசால் பெரும் விளம்பரத்துடன் தொடங்கப்பட்டது “உதான்” என்ற விமான சேவைத் திட்டம். இத்திட்டத்தின் மூலம், செருப்பு அணிந்த சாமானியர்களும், விமானத்தில் பயணிக்கலாம் என்று பெருமையுடன் கூறியது பா.ஜ.க. அரசு.

**உதான் திட்டத்திற்காக ஒன்றிய அரசு 1,089 கோடி ரூபாயை ஒதுக்கியது. நாடு முழுவதும் உதான் திட்டம் 3 கட்டங்களாக செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், திட்டமிடப்பட்ட 774 வழித்தடங்களில் 403 தடங்களில் விமான சேவை கடைசி வரை தொடங்கப்படவே இல்லை என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை. மொத்தத்தில் உதான் திட்டத்தில் 774 தடங்களில் விமான சேவை வழங்க முடிவு செய்ததில் 7 சதவிகித தடங்களில் மட்டுமே விமானங்கள் இயக்கப்படுகின்றன. 93 சதவிகித தடங்களில் விமானங்கள் இயக்கப்படவில்லை.**

தமிழ்நாட்டில் சேலம், தஞ்சாவூர், ராமநாதபுரம், வேலூர் நகரங்களுக்கு உதான் திட்டத்தில் விமான சேவை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டது. ஆனால், திட்டமிடப்பட்ட 4 நகரங்களில் சேலத்துக்கு மட்டுமே உதான் திட்டத்தில் விமானம் இயக்கப்பட்டது. 2018 முதல் 2021 வரைக்கும் தான் விமானம் வந்தது. அதுவும் சென்னைக்கும் சேலத்துக்குமான ஒரே ஒரு விமானம் மட்டுமே வந்தது. இரண்டு ஆண்டுகளாக சேலத்துக்கு விமானம் இல்லை. அந்த விமானநிலையம் செயல்படவே இல்லை.

ராமநாதபுரம், தஞ்சாவூர், வேலூருக்கு உதான் திட்டத்தில் விமானங்கள் இயக்கப்படவே இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். உதான் திட்டத்தில் ஆயிரத்து 89 கோடி ரூபாய் செலவிட்டும் 83 வழித்தடங்களில் விமான சேவை தொடங்கப்படவில்லை என சி.ஏ.ஜி. அறிக்கை கூறியுள்ளது.

சிறு நகரங்கள் என்று அடையாளம் காணப்பட்ட வழித்தடங்களில் எந்த நிறுவனம் விமானங்களை இயக்குகிறதோ அந்நிறுவனங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு மானியம் வழங்கியது ஒன்றிய அரசு. இப்படியாக 112 நகரங்களில் இயக்கப்பட்ட விமானங்களுக்கு மானியம் கொடுக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு மானியம் கொடுத்தார்கள். அதனை நிறுத்தினார்கள். அதன்பிறகு விமானமும் நிறுத்தப்பட்டு விட்டது. 112 நகரங்களுக்கு இயக்கப்பட்ட விமான சேவை வெறும் 54 வழித்தடங்களாக அதன்பின்னர் சுருங்கியது.

மொத்தமாக அறிவிக்கப்பட 774 வழித்தடங்களில் 720 வழித்தடங்களுக்கு விமானங்கள் இயக்கப்படவில்லை என்று கூறியுள்ளது சி.ஏ.ஜி. அறிக்கை... இதன்மூலம், ஒன்றிய பா.ஜ.க. அரசால் பெரும் விளம்பரத்துடன் தொடங்கப்பட்ட உதான் திட்டம் படுதோல்வியடைந்திருப்பது அம்பலமாகியுள்ளது.

**அது உதான் திட்டமல்ல, உடான்ஸ் திட்டம்!**

- தொடரும்

“விஸ்வகர்மா யோஜனா” என்ற பெயரில் ஒன்றிய அரசு கொண்டு வரும்

# குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து செப்டம்பர் 6ஆம் தேதி சென்னையில் மாபெரும் மக்கள் திரள் கண்டன ஆர்ப்பாட்டம்!

## திராவிடர் கழகம் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக. 31-

“விஸ்வகர்மா யோஜனா” என்ற பெயரில் பரம்பரைப் பரம்பரையாக செய்து வந்த ஜாதித் தொழிலை ஊக்குவிக்கும் வர்ணாசிரம குலக்கல்வி திட்டத்தை ஒன்றிய பி.ஜே.பி அரசு கொண்டு வந்துள்ளது. 18 வயது நிரம்பியவர்கள் விண்ணப்பிக்கலாம் என்பது அப்பன் தொழிலை மகன் செய்வதற்கான சூழ்ச்சியாகும் மேற்படிப்பைத் தடுப்பதும் ஆகும்.

இதனைக் கண்டிக்கும் வகையிலும், எதிர்க்கும் வகையிலும் வரும் செப்டம்பர் 6ஆம் தேதி சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்கும் மாபெரும் மக்கள் திரள் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என்று திராவிடர் கழகம் சென்னை பெரியார் திடலில் நேற்று முன்தினம் (29.8.2023) கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் வருமாறு :-

குலக்கல்வித் திட்டத்தின் மறுவடிவமான ‘விஸ்வகர்மா யோஜனா’ என்ற ஒன்றிய அரசின் சதித் திட்டத்தைக் கண்டித்து நேற்று முன்தினம் (29.08.2023) சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

‘விஸ்வகர்மா யோஜனா’ என்ற ஒன்றிய அரசின் திட்டமும். அதில் அடங்கியுள்ள குலத் தொழில் பக்கம் இளைஞர்களை ஈர்க்கும் சூழ்ச்சியும் பி.ஜே.பி. தலைமையிலான ஒன்றிய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, அண்மையில் ‘விஸ்வகர்மா யோஜனா’ என்ற ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் சுதந்திர தினக் கொடியேற்று நிகழ்ச்சியிலும் 15.08.2023 இத்திட்டத்தை அறிவித்துள்ளார்.

செருப்பு தைப்பவர் உள்பட பரம்பரை பரம்பரையாக 18 வகையான ஜாதித் தொழில்களைச் செய்பவர்களுக்கு ஊக்கம் அளிப்பதாகக் கூறி ரூபாய் 13 ஆயிரம் கோடியை ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ளது. (ஜாதிப் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

‘குரு சிஷ்யப் பரம்பரை’ என்றும் வெளிப்படையாகவே கூறப்பட்டுள்ளது. இந்த நிதியைப் பெறுவதற்கு குறைந்த பட்ச வயது 18 என்றும் ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதன் பின்னணியில் இருப்பது 18 வயது அடைந்த பிள்ளைகளை மேற்கொண்டு கல்லூரியில் படிக்கவிடாமல் பரம்பரை ஜாதித் தொழிலையே செய்யத்தூண்டும், குலத் தொழிலை மேலோங்கச் செய்யும் திட்டமிட்ட சூழ்ச்சியாகும்.

இது 1952-1954இல் சென்னை மாநில முதலமைச்சராக இருந்த ராஜகோபாலாச்சாரியார் கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்தின் மறுபதிப்பாகும்.

ஆண்டாண்டு காலமாகக் கல்வி உரிமை மறுக்கப்பட்ட பிள்ளைகள் கல்வியில் உயர்நிலையை எட்டுவதைத் தடுத்து நிறுத்தி, 18 வயது அடைந்தவுடன் அவர்களைப் பரம்பரை ஜாதித் தொழிலை நோக்கியே நகர்த்திடத் திட்டமிட்டுள்ள ஒன்றிய அரசின் இந்த வருணாசிரம சதித் திட்டத்தை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நாக்கில் தேன் தடவுவது போல, நிதியை ஒதுக்கி, காலம் காலமாகக் கல்வி உரிமை மறுக்கப்பட்ட மக்கள், தப்பித் தவறிக் கல்லூரியில் அடியெடுத்து மேற்படிப்பு படிக்க முன் வந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் அதனை முறியடிக்கும் சூழ்ச்சிப் பொறிதான் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ‘விஸ்வகர்மா யோஜனா’ என்பதை எடுத்துக்காட்டி இக்கூட்டம் இந்தக் குலக்கல்வித் திட்டத்தை எதிர்க்கிறது.

பரம்பரை பரம்பரையாக ஜாதி தொழிலையே செய்ய வேண்டும் என்று பிள்ளைகளின் கல்விக் கண்ணைக் குத்தும் இந்தத் திட்டத்திற்குத் தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்றும், எதிர்க்க முன்வர வேண்டும் என்றும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

முதற்கட்டமாக இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் குலக்கல்வித் திட்டத்தின் மறுவடிவமான விஸ்வகர்மா யோஜனா திட்டத்தை எதிர்த்து அனைத்து சமூக நீதிக் கொள்கை சார்ந்த கட்சிகளும் ஒருங்கிணைந்து மாபெரும் மக்கள் திரள் கண்டன ஆர்ப்பாட்டத்தை வரும் செப்டம்பர் 6ஆம் தேதியன்று சென்னையில் நடத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது.



சென்னை பெரியார் திடலில் நேற்று முன்தினம் (29.08.2023) திராவிடர் கழகம் சார்பில் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைப்புகளின் பிரதிநிதிகள்:

ஆசிரியர் கி. வீரமணி, தலைவர், திராவிடர் கழகம்

ஆ.ராசா எம்.பி, துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க.

கே.எஸ்.அழகிரி, தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

தொல்.திருமாவளவன் எம்.பி., தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

கே.எம்.காதர் மொகிதீன், தேசியத் தலைவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்.

மு.வீரபாண்டியன், மாநிலத் துணைச்செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

ஆ.வந்தியத்தேவன், அமைப்புச் செயலாளர், ம.தி.மு.க.

க.கனகராஜ், மாநில செயற்குழு உறுப்பினர் சி.பி.அய்.எம்.

ப.அப்துல் சமது எம்.எல்.ஏ., பொதுச் செயலாளர், மனித நேய மக்கள் கட்சி

பேராசிரியர் சுப.வீரபாண்டியன், பொதுச் செயலாளர் திராவிட இயக்கத் தமிழர் பேரவை

பொன்.குமார், தலைவர், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி

கோ.கருணாநிதி, அகில இந்திய பிற்படுத்தப்பட்ட ஊழியர் நலச்சங்கங்களின் கூட்டமைப்பு

பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு, பொதுச்செயலாளர், பொதுப்பள்ளிக்கான மாநில மேடை

துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ், பொருளாளர் வீ.குமரேசன், பிரச்சாரச் செயலாளர் வழக்குரைஞர் அ.அருள்மொழி, துணைப் பொதுச் செயலாளர் பொறியாளர் ச.இன்பக்கனி மற்றும் அனைத்துக் கட்சிகளின் பொறுப்பாளர்கள் பலரும் பங்கேற்றனர்.

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

## தமிழ்நாடு அரசுக்கு திருவாரூர் மாவட்ட கூட்டத்தில் பாராட்டு தீர்மானம்!

திருவாரூர், ஆக 31-

தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரசு தொடக்கப்பள்ளிகளிலும் காலை உணவுத்திட்டத்தை, திருக்குவளையில் தொடங்கி வைத்து, இந்திய வரலாற்றில் நீங்காத இடத்தை பெற்றிருக்கும் தமிழ்நாடு முதல்வருக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்து தலையாமங்கலம் ஜி.பாலு தலைமையில் நடைபெற்ற திருவாரூர் மாவட்ட ஊராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவாரூர் மாவட்ட ஊராட்சிக் கூட்டம் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், செயலாளர் சந்தானம் ஆகியோர் முன்னிலை ஏற்றனர், கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் முதல்வரின் வழிகாட்டுதல்களின்படி மாவட்டம் முழுவதும் நடைபெற்ற மாவட்ட ஊராட்சி பணிகளும், நடைபெற இருக்கிற பணிகளும் குறித்து விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் திராவிட நாயகர் முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களால் இந்திய அளவில் முன்னிலை அடைந்திருக்கும் நமது தமிழ்நாடு, பள்ளிக்குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தும் வகையில் தொலைநோக்குப்பார்வையுடன் கொண்டுவந்திருக்கும் காலை உணவுத்திட்டத்தை, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த ஊரான திருக்குவளையில், அவர் படித்த பள்ளியில் தொடங்கிவைத்திருக்கும் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கு திருவாரூர் மாவட்ட ஊராட்சியின் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்வது, முதல்வரின் திட்டங்களின் பலன்களை காலம் தாழ்த்தாமல் மக்களுக்கு கொண்டு சேர்க்க அயராது பாடுபடுவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# காவிரியில் 6,398 கன அடி நீர் திறப்பு!

பெங்களூரு, ஆக.31-

கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இரு அணைகளில் இருந்து 4,293 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வந்த நிலையில் நேற்று தண்ணீர் திறப்பு 6,398 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கே.ஆர்.எஸ் அணையில் இருந்து 4,398 கனஅடியும் கபினி அணையிலிருந்து 2,000 கன அடி நீரும் காவிரியில் திறந்து விடப்பட்டு வருகிறது. நிலவரப்படி வெளியேற்றப்படும் நீரின் அளவு 6,398 கன அடியாக உயர்ந்துள்ளது.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; அமெரிக்காவின் கலிபோர்னியா சட்டமன்றத்தில், சாதி பாகுபாடுகளுக்கு எதிரான மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளதாமே ?

**சிந்துமணி : ஆமாண்டி அந்து; அமெரிக்காவில், இப்படிப் பட்ட மசோதாவை நிறைவேற்றும் முதல் மாகாணம் கலிபோர்னியா.**

**சாதி வேறுபாடுகள் பரவி, விளிம்புநிலை மக்கள் ஒடுக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், இத்தகைய மசோதா அங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.**

**பெரியார் - அண்ணா - கலைஞர், உலக நாடுகள் அனைத்திற்கும் பொதுவாக மிகவும் தேவையானவர்கள் என்பதை, காலம் படிப்படியாக நிரூபணம் செய்து கொண்டிருக்கிறது என்பதற்கு கலிபோர்னியா மசோதா தற்போதைய சான்று !**

காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை ஏற்க முடியாது! தமிழ்நாடு அரசு சார்பில்

# செப்.1 - உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு!

## நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

**சென்னை, ஆக. 31 -**

**நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறுகையில், காவிரி ஆணையத்தின் உத்தரவை ஏற்க முடியாது எனவும்,குறுவை சாகுபடி பயிரைக் காப்பாற்ற தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய காவிரி நீரை கர்நாடக அரசு உடனடியாக வழங்க உத்தரவிடக் கோரி, தமிழ்நாடு அரசு சார்பில் செப்டம்பர் 1-ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.**



அதன் விவரம் வருமாறு:-

காவிரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நேற்று முன்தினம் (29.08.2023) பிற்பகல் நடைபெற்றது.

தமிழ்நாட்டுக்கு ஜூன், ஜூலை மாதத்தில் திறந்துவிட வேண்டிய 28 டி.எம்.சி நீர், ஆகஸ்ட் மாதத்துக்கான 45 டி.எம்.சி. நீர் கர்நாடகாவால் முழுமையாகத் திறந்து விடப் படாமல் உள்ளது.

இதுவரை நிலுவையில் உள்ள 54 டி.எம்.சி. நீரை அடுத்த 15 நாட்களுக்குள் திறந்துவிட வேண்டும். அதற்கு ஏற்ப வினாடிக்கு 24,000 கனஅடி தண்ணீர் திறக்க வேண்டும் என காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு கோரிக்கை வைத்தது. இதுதவிர செப்டம்பர் மாதத்துக்கான 36.76 டி.எம்.சி தண்ணீரையும் உரிய நேரத்தில் திறந்து விடவும் வலியுறுத்தியுள்ளது. நேற்று முன்தினம் கூட்டத்தில் தமிழ்நாட்டுக்கு கூடுதல் தண்ணீர் திறக்க காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

**அமைச்சர் துரைமுருகன் பேட்டி!**

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை செய்தியாளர்களைச் சந்தித்த நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், “காவிரி மேலாண்மை ஆணை யம் நாங்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆகையால் வேறுவழி கிடையாது, மறுபடியும் உச்ச நீதிமன்றத்தை அணுக வேண்டியதுதான் எங்களுக்குள்ள ஒரே வழி. செப்.1 அன்று உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வோம்” என்று கூறினார்.

**காவிரி மேலாண்மை ஆணையம் நேற்று முன்தினம் புதுடெல்லியில் கூடிய நிலையில் சென்னையில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-**

காவிரி ஒழுங்காற்றுக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் காவிரியில் 5 ஆயிரம் கன அடி தண்ணீரை 15 நாட்களுக்கு திறந்து விடும்படி அந்தக் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் அது போதாது என்று நாம் சொல்லி உள்ளோம்.

எனவே இன்றைக்கு (நேற்று) முன்தினம் காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் நடந்தது. அதில் தமிழக அரசின் நீர்வ ளத்து துறைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, காவிரி தொழில் நுட்பக் குழுத் தலைவர் சுப்பிரமணியம் ஆகிய இருவரும் கலந்து கொண்டனர்.

அவர்கள் தமிழகத்தின் கோரிக்கையை வற்புறுத்தினர். வினாடிக்கு 24,000 கன அடி தண்ணீர் வழங்கினால்தான் பயிர்கள் காயாமல் இருக்கும் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறினர்.

கர்நாடக முதல்வர் சித்தராமையா, அணைகளில் போதுமான தண்ணீர் இல்லை என்று கூறி உள்ளார். காவிரி மேலாண்மை ஆணையம் நாங்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளவில்லை. காவிரி ஒழுங்காற்றுக் குழு கூறியதைத்தான் காவிரி மேலாண்மை ஆணையம் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆகையால் எங்களுக்கு வேறுவழி கிடையாது. மறுபடியும் உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டியதுதான். வரும் வெள்ளிக்கிழமை உச்சநீதிமன்றத்தில் வழக்கு வருகிறது. அன்றைக்குத் தெரிவிப்போம். அவர்களுக்கு தண்ணீர் வேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

எங்களுக்கு தண்ணீர் வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். குறைந்தது வினாடிக்கு 24,000 கனஅடி நீர் திறக்க வேண்டும் என்று கேட்கிறோம். அவர்கள் வினாடிக்கு 5,000 கன அடி தண்ணீர் 15 நாட்களுக்கு வரும் என்று கூறுகிறார்கள்.

அதனால்தான் நாங்கள் நீதிமன்றத்துக்குச் சென்றிருக்கிறோம். வெள்ளிக்கிழமை வழக்கு வருகிறது. குறுவை சாகுபடி மோசமான நிலையில் உள்ளது. கர்நாடகா 45 டி.எம்.சி. தண்ணீர் தராமல் நிலுவையில் வைத்துள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; வரும் நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்து, சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை 200 ரூபாய் குறைத்திருக்கிறார்களே ?

**பட்டணம் : ஆமாம் அய்யா; 2014ல் பா.ஜ.க. ஒன்றிய ஆட்சி பீடத்தைப் பிடித்து அமருவதற்கு முன், சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 417 ரூபாய். ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் சிலிண்டர் விலை படிப்படியாக ஏற்றப்பட்டு, 1,118 ரூபாயை எட்டியது. விலை உயர்த்தப்பட்ட போதெல்லாம், அந்தப் பழியை எண்ணெய் நிறுவனங்களின் மீது சுமத்தியது பா.ஜ.க. இப்போது தேர்தல் வருகிறது என்றதும், அவர்களாகவே முன்வந்து, கடந்த 9 ஆண்டுகளில் 800 ரூபாய் உயர்த்திவிட்டு, தற்போது அதில் கால்பங்கு அதாவது 200 ரூபாய் குறைத்திருப்பதாக ஒன்றிய அமைச்சர் அனுராக் தாக்கூர் அறிவித்திருக்கிறார்.**

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் வித்தை காட்டும் விதத்தை, வாக்காளர்கள் நன்றாகவே அறிவார்கள்.**

**இந்த மாதிரி மிட்டாயைக் கொடுத்து, ஏதும் அறியாச் சிறு பிள்ளைகளைத்தான் ஏமாற்ற முடியும்; எல்லா விவரங்களையும் அறிந்திருக்கும் இந்திய வாக்காளர்களை அல்ல!**

**பா.ஜ.க.வின் பெட்டியில் இன்னும் எத்தனை ‘இனிப்பு மிட்டாய்களோ!’.**

நாடாளுமன்றத் தேர்தலுக்காக சிலிண்டர் விலை குறைப்பு நாடகம்!

# மக்களின் கோபத்தை 200 ரூபாய் குறைத்துவிடாது!

## மோடி அரசை கடுமையாகத் தாக்கிய மல்லிகார்ஜுன கார்கே!

*புதுடெல்லி, ஆக. 31 -*

நாட்டு மக்களின் கோபத்தை ரூ.200 மானியத்தால் குறைக்க முடியாது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.

இந்தியாவில் 2014ம் ஆண்டு மோடி அரசு ஆட்சிக்கு வந்தபோது வீட்டு உபயோக சிலிண்டர் விலை ரூ.417 ஆக இருந்தது. ஆனால் படிப்படியாக ரூ.1118 ஆக உயர்ந்துள்ளது. இந்த விண்ணை முட்டும் விலை உயர்வால் குடும்பத் தலைவிகள் கடும் அவஸ்தைகளை சந்தித்து வருகின்றனர்.

இந்த கடும் விலை உயர்வைக் குறைக்க வேண்டும் என காங்கிரஸ், தி.மு.க, சி.பி.எம் உள்ளிட்ட கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன. அப்போது எல்லாம் சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்ததே விலை உயர்வுக்கு காரணம் என மோடி அரசு கூறியது. பின்னர் கச்சா எண்ணெய் விலை குறைந்த பிறகும் கூட சிலிண்டர் விலையை மோடி அரசு குறைக்கவில்லை.



இந்நிலையில் 5 மாநிலங்களில் தேர்தல் நெருங்கும் நிலையில், வீட்டு உபயோ சமையல் சிலிண்டர் விலையை ரூ.200 குறைத்துள்ளது. மேலும் உஜ்வாலா திட்டத்தின் கீழ் பயன்பெறுபவர்களுக்கு ரூ.200 மானியம் வழங்கப்படும் எனவும் ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு தேர்தல் நாடகம் என எதிர்க்கட்சி தலைவர்கள் விமர்சித்துள்ளனர்.

இந்நிலையில், கஷ்டத்தில் இருக்கும் நாட்டு மக்களின் கோபத்தை ரூ.200 மானியத்தால் குறைக்க முடியாது என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், “எப்போது வாக்குகள் குறைய ஆரம்பிக்கிறதோ, அப்போதே தேர்தல் பரிசுகள் விநியோகிக்க ஆரம்பம் ஆகும்!

மக்கள் உழைத்து சம்பாதித்த பணத்தை கொள்ளையடித்த இரக்கமற்ற மோடி அரசு, தற்போது தாய் மற்றும் சகோதரிகள் மீது போலியான நல்லெண்ணத்தை காட்ட வருகிறது. ஒன்பதரை வருடங்களாக சாமானியனின் வாழ்க்கையை சீரழித்துக்கொண்டே இருந்தார்கள், அப்போது ஏன் எந்த ஒரு “பாசப் பரிசு”ம் நினைவுக்கு வரவில்லை?

140 கோடி இந்தியர்களை ஒன்பதரை வருடங்களாக சித்திரவதை செய்துவிட்டு, “தேர்தல் லாலிபாப்களை” கைமாறுவது பலிக்காது என்பதை பா.ஜ.க. அரசு தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் பத்தாண்டு கால பாவங்கள் கழுவப்பட முடியாதது.

பா.ஜ.க.வால் அமல்படுத்தப்பட்ட பணவீக்கத்தை எதிர்கொள்ள, பல மாநிலங்களில் முதன்முறையாக காங்கிரஸ் கட்சி ஏழைகளுக்கு ரூ.500 சிலிண்டர்களை வழங்கப் போகிறது. ராஜஸ்தான் போன்ற பல மாநிலங்கள் ஏற்கனவே இதை அமல்படுத்தியுள்ளன.

2024ல் கஷ்டத்தில் இருக்கும் நாட்டு மக்களின் கோபத்தை ரூ.200 மானியத்தால் குறைக்க முடியாது என்பதை மோடி அரசு அறிந்து கொள்ள வேண்டும். இந்தியாவைப் பற்றிய பயம் நல்லது, மோடி அவர்களே! பொதுமக்கள் முடிவு செய்து விட்டனர். பணவீக்கத்தை முறியடிக்க, பா.ஜ.க.வுக்கு வெளியேறும் கதவை காட்டுவது தான் ஒரே வழி” என்று தெரிவித்துள்ளார்.



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (29.08.2023) ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் சந்தித்து கோரிக்கை மனுவினை வழங்கினார்.

ஊழலை விசாரித்ததில் ஊழல்!

# அமலாக்க துறையை உடனே இழுத்து மூட உத்தரவிட வேண்டும்!

## உச்ச நீதிமன்றத்துக்கு ஆம் ஆத்மி வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஆக. 31 -*

அமலாக்க துறை உதவி இயக்குநர் மீது சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்ததை தொடர்ந்து, அமலாக்க இயக்குனரகத்தை உச்ச நீதிமன்றம் மூட வேண்டும் என்று ஆம் ஆத்மி கட்சி வலியுறுத்தி உள்ளது.

டெல்லி மதுபானக் கொள்கை முறைகேடு வழக்கில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக மதுபான விற்பனை நிறுவன தொழிலதிபர் அமன்தீப் தாலிடம் அமலாக்க இயக்குநரகத்தின் துணை இயக்குநர் பவன் காத்ரி ரூ.5 கோடி லஞ்சம் கேட்டு பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்து பேசிய ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை எம்.பி. சஞ்சய் சிங், “ரூ.5 கோடி லஞ்சம் பெற்றுள்ள விவகாரத்தில் அமலாக்க இயக்குநரக உதவி இயக்குநருக்கு எதிராக சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்துள்ளது.

மதுபான ஊழல் தொடர்பான ஆதாரத்தை கண்டுபிடிக்க அமலாக்கத் துறை தவறிவிட்டது. தற்போது அமலாக்கதுறை என்பது மிரட்டி பணம் பறிக்கும் துறையாகி விட்டது. முறைகேடு விசாரணை என்ற பெயரில் பணம் பறிக்கிறார்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளில் எம்.எல்.ஏ.க்களை உடைக்க இது பயன்படுத்தப்படுகிறது. இது குண்டர்களின் துறை.

எனவே, இந்த துறையை உடனடியாக மூட உச்சநீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும். லஞ்சமாக பெற்றத் தொகையில் யாருக்கு எவ்வளவு பங்கு கிடைத்தது என்பது பற்றி விசாரணை நடத்த வேண்டும்,” என்று கூறினார்.




திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் தெற்கு மாநகர், வாலிபாளையம் பகுதி, 35 வது வட்டம், பெரியார் நகரில், மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தலைமையில், மாநகர கழகச் செயலாளர்கள் டிகேடி. மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், தெற்கு மாநகர அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், வடக்கு மாநகர அமைப்பாளர் எஸ்.முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை, கழக அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையில் திண்ணை பிரச்சாரத்தை கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர் கே.இ.பிரகாஷ் துவக்கி வைத்தார். இதில் மாமன்ற உறுப்பினர்கள் முத்துகிருஷ்ணன், பி.ஆர்.செந்தில்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் த.சசிகுமார், ப.ரவிச்சந்திரன், செ.ராஜசேகர், மு.முகமது ஜினைத், சசிகுமார் (எ) த.ஞானசிகாமணி, ஈ.பாலசுப்பிரமணியம், உ.லிங்கேஸ்வரன், மாநகர துணை அமைப்பாளர்கள் தெற்கு ம.அசோக்குமார், கா.சையது அபுதாஹிர், மு.விக்னேஷ்குமார், க.திருநாவுக்கரசு, கு.அரவிந்த், ர.தமிழரசு, வடக்கு ஆ.வஞ்சிமுத்து, த.சந்திரசேகர், ச.பாண்டிதுரை, அ.பார்த்திபன், நா.தியாகு, பகுதி கழகச் செயலாளர்கள் மு.க.உசேன், கொ.ராமதாஸ், வட்ட கழகச் செயலாளர் ஆட்டோ ப.தங்கராஜ், செ.திலக்ராஜ் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளார்கள், துணை அமைப்பளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கழகத் தீர்மானக் குழு!

# நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## தீர்மானக் குழுச் செயலாளர்கள் அறிவிப்பு

தி.மு.க. தீர்மானக்குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 7-9-2023 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில், கழக தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தீர்மானக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பொருள் :** தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா,

டிசம்பர் 17 அன்று சேலத்தில் நடைபெற உள்ள “தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு", கழக ஆக்கப் பணிகள் குறித்து.

'அண்ணா அறிவாலயம்'
சென்னை - 18
நாள் : 29-8- 2023

**மீ.அ.வைத்தியலிங்கம்**
**கீரை எம்.எஸ். விஸ்வநாதன்**
**அக்ரி கே.பி.டி.கணேசன்**
செயலாளர்கள், தி.மு.க. தீர்மானக்குழு



கிருஷ்ணகிரி கார்னேசன் திடலில் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் சார்பில் பெரியார் மையம் திறப்பு விழா, தந்தை பெரியார் சிலை திறப்பு விழா, அண்ணல் அம்பேத்கர் நூலகம் திறப்பு விழா ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். திராவிட கழக தலைமைக் கழக அமைப்பாளர் ஊமை ஜெயராமன் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாவட்ட தலைவர் அறிவரசன் வரவேற்புரை ஆற்றினார். பெரியார் சிலையை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என். நேருவும், அம்பேத்கர் நூலகத்தை உணவு மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணியும் , கி வீரமணி படிப்பகத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தியும் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினர்.



அரியலூர் மாவட்டம், திருமானூர் மேற்கு ஒன்றியம் - மேலப்பழுவூரைச் சேர்ந்த 9ஆம் வகுப்பு மாணவி தர்ஷினி இளம் பேச்சாளராக கழகத்தின் மேடைகள் தோறும் இயக்கக் கொள்கைகளையும் சாதனைகளையும் எடுத்துரைத்து வருகிறார். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சமீபத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் "தமிழ்த் திரையுலகில் கலைஞரின் எழுதுகோல்" எனும் தலைப்பில் உரையாற்றி, இரண்டாம் பரிசாக வென்ற பரிசுத் தொகை ரூ.7 ஆயிரத்தை, சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞர் அணியின் 2ஆவது மாநாட்டுப் பணிகளுக்காக கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்ட நிர்வாகிகள், 'இளம் வயதிலே கலைஞர் மீதும், கழகத்தின் மீதும் அவர் வைத்திருக்கும் அன்பை கண்டு வியந்தோம். தர்ஷினி மேன்மேலும் பல உயரங்களைத் தொட என் அன்பும் வாழ்த்துகளும்!" என்று வலைதள பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் மரம் விழுந்து உயிரிழந்த

# மாணவியின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

தஞ்சை, ஆக. 31-

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், பசுபதிகோவில்1 கிராமத்தில் உள்ள தனியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்று வரும் மாணவிகள் பாபநாசம் வட்டம், உள்ளிக்கடை, கண்டகரையத்தைச் சார்ந்த செல்வி. சுஷ்மிதாசென், த/பெ. செந்தில்குமார் (வயது15) மற்றும் பாபநாசத்தைச் சேர்ந்த செல்வி.இராஜேஸ்வரி, த/பெ.கந்தன் (வயது 15) ஆகிய இருவர் மீதும் நேற்று முன்தினம் (29.8.2023) மாலை பெய்த மழை மற்றும் காற்றின் காரணமாக பள்ளியின் அருகிலுள்ள மரம் வேரோடு சாய்ந்து விழுந்ததில் செல்வி.சுஷ்மிதாசென் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் படுகாயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள செல்வி.இராஜேஸ்வரிக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

மாணவி செல்வி.சுஷ்மிதாஷென்னை இழந்து வாடும் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் செல்வி.இராஜேஸ்வரிக்கு ஒரு இலட்சம் ரூபாயும் நிதியுதவி வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

### உன்னதமான காலை உணவுத் திட்டத்தை கொண்டுவந்து

# பிள்ளைகள் கல்வி கற்க தாயாக மாறி ஊக்குவிக்கிறார் முதல்வர்!

## செஞ்சியில் அமைச்சர் மஸ்தான் பெருமிதம்!

செஞ்சி ஆக 31-

ஒரு தாய்க்கு ஒரு தாயாக மாறிமுதலமைச்சரின்உன்னதமான காலை உணவு திட்டத்தினை கொண்டு வந்து பிள்ளைகள் கல்விகற்பதை முதலமைச்சர் ஊக்குவிப்பதாக செஞ்சி உருது பள்ளியில் காலை உணவு திட்டத்தை அமைச்சர் செஞ்சி மஸ்தான் துவக்கி வைத்து பெருமிதம் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி,மீனம்பூர் பள்ளியம்பட்டு, உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அரசு உருது தொடக்கப் பள்ளிகள்,நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் தொடக்க விழா நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்முன்னிலை வகித்தார்.

பள்ளி தலைமை ஆசிரியர்கள் பத்ருன்னிசா, நசிமுன்னிசா,ஆசீமாபாத் தூன் ஆகியோர் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும்வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளிலும்விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில் இன்று அரசு உருது பள்ளிகளில் இத்திட்டத்தை அமைச்சர்செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடல் கடந்து வெளிநாடுகளுக்கு சென்று உயர்கல்விபடிக்கும் மாணவர்களுக்கு படிப்பதற்கு கூட தாட்கோ வங்கி மூலம் கடன் கொடுத்து கல்வி கற்பதற்கு சட்டத்தின் மூலம் வழிவகை செய்துள்ளார்கள்.

மேலும் ஒரு தொலை நோக்கு சிந்தனையுடன் இந்தியாவில் எந்த முதலமைச்சருக்கும் வராத சிந்தனை நம்முடைய முதலமைச்சருக்கு வந்ததின் அடிப்படையில்முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

அந்த வகையில் ஒரு தாய்க்கு ஒரு தாயாக மாறி காலை உணவு திட்டத்தை உருவாக்கிஉன்னதமான ஒரு திட்டத்தை இந்தியாவிற்கு வழிகாட்டியாகவும் தமிழகத்தில் காலை உணவு திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பிள்ளைகளும் கல்வி கற்பதற்காக இத்திட்டத்தை முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தி உள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் புகழாரம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,நகர செயலாளர் கார்த்திக்,வட்டார கல்வி அலுவலர் சிவகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் முன்வர், கல்யாணி ஜாக்கி, பேரூரட்சி கவுன்சிலர்கள் நூர்ஜகான் ஜாபர், மோகன், மகாலட்சுமி கமலநாதன், நிர்வாகிகள் இக்பால், முன்னால் தலைவர் முனுசாமி, பாலு,லியாகத் அலி, தாஜ்ஜுதின், வாகீத், குப்புசாமி, மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பழனி, செந்தில், தொண்டரணி பாஷா, ஜி.டி.தனசேகரன், ஜே.எஸ்.சர்தார். செந்தில்குமார், பிலால், இம்ரான், ஷாஜகான் ஆஜீஸ் ஷகீல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சைதை மேற்குப் பகுதி - முன்னாள் வட்டச் செயலாளர்

# சைதை கோ.மதிவாணன் மறைவு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அஞ்சலி!

சென்னை, ஆக 31-

சைதை மேற்கு பகுதி 139 வது வட்ட மாவட்ட பிரதிநிதி முன்னாள் வட்டக் கழக செயலாளர் சைதை கோ.மதிவாணன் 29.8.2023 அன்று காலை 5 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., துணை மேயர், மு மகேஷ் குமார், எம் கிருஷ்ணமூர்த்தி எம்.சி. இரா துரைராஜ் எம்.சி. எஸ்.குணசேகரன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன் எம்.சி., சைதை மா.அன்பரசன், சைதை சம்பத், சைதை சாதிக், ஆர்கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், கோ.பாஸ்கர், அஞ்சல் ராமன், தா மோகன் குமார் எம்.சி., ப.சுப்பிரமணி எம்.சி., களக்காடி எல்லப்பன், த.சம்பத், வி.பி.ஜானகிராமன், இ.முருகேசன், மு. ஆரோக்கியம், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், நா.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, நேரு நகர் எஸ்.பாட்ஷா, கோட்டூர் க.மணி, கோட்டூர் சண்முகம், சின்னமலை ஆரி, எஸ்.ஆர் செந்தில், டி.என் சிவமணி ராமமூர்த்தி, அஞ்சுகம் நகர் வீரா, பாரி நகர் சசி, கு. புகழ்வேந்தன், ஜி பாபு, பால்கார் ரவி, ஜி கே ராமச்சந்திரன், வி.மதிவாணன், சைதை மஜித், கு.கார்த்திகேயன், ஆர்.டி.மூர்த்தி, மெடிக்கல் கார்த்திக், ஹரிபாபு, ஏ. எஸ்.பழனி தீனதயாளன், கரிமுல்லா, தமிழ் அன்சாரி, வெபுருஷோத்தமன், மு.காளியப்பன், த.மணி, சார்பு சரவணன், சுரேஷ், ராஜா ஆறுமுகம், ம.சுகுமார் தீபன், இரா சத்யா, பா. மோ.கார்த்திக், அருண் கண்ணதாசன், இ.பி.ஆனந்தன், மு.அஜிம், மங்கையர் திலகம், சி.ஆறுமுகம், எஸ்.ரவி, ஜிம் பிரபு கி.தினேஷ், மு.காத்தவராயன், நியூ காலனி சம்பத், ஆட்டோ குணா, துளசி வினோத், ஜெ.ரவிச்சந்திரன், ஆட்டோ பாஸ்கர், சேகர் நகர் பாஸ்கர், ஆர்.மைக்கல், ஆர்.கன்னியப்பன், வ. இளங்கோ, வ.ரஜினி, துளசி, எம்.சுந்தரேசன், ஆ.வரதன், வே.கோதண்டம், வழக்கறிஞர் பரத்குமார், பி.எஸ். முருகன், சாந்தி சுந்தரம், ஆகியோர் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.



சென்னை, மதுரவாயலில் நேற்று முன்தினம் (29.08.2023) துண்டலம் கிராமத்தில் அமைந்துள்ள 'தமிழ்த்தென்றல்' வி.கலியாணசுந்தரனார் அவர்களின் நூலகத்தை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி உள்ளார்.

### ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். தேர்வுக்குத் தயாராக ஊக்கத் தொகை!

# ஊக்கமளிக்கும் 'நான் முதல்வன்'! முதல்வரின் முனைப்பு பாராட்டுக்குரியது!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் புகழாரம்!

சென்னை, ஆக. 31-

ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். தேர்வுக்குத் தயாராக ஊக்கத் தொகை வழங்குவதால் பல மாணவர்கள் தேர்ச்சி பெற ஊக்கமளிக்கும் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் எடுத்துள்ள முனைப்பு பாராட்டுக்குரியது என 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் புகழ்ந்துரைத்து ள்ளது.

இதுகுறித்து 30.8.2023 தேதிய 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு, முதன்மை தேர்வுக்கு தயாராக ரூ.25 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. கல்வி திட்டங்களுக்கு அரசு காட்டும் அக்கறையால், இப்போது பள்ளிக்கூடத்துக்கு செல்லாத மாணவர்களே இல்லை என்றநிலை உருவாகியுள்ளது.

இன்றைய இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் கல்வியின்பால் அதிக நாட்டம் ஏற்பட்டிருப்பது, மிகவும் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. ஆனால், படித்து முடித்தவர்களுக்கு உடனடியாக வேலை கிடைப்பதன் மூலம்தான், அவர்களின் வாழ்க்கையை ஒளிமிக்கதாக மாற்ற முடியும். அரசு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், மத்திய அரசாங்கமும், தமிழக அரசும் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

காலாகாலமாக இளைஞர் சமுதாயத்திடம் மட்டுமல்லாமல், அவர்கள் பெற்றோரிடமும் "அரைக்காசு உத்தியோகம் என்றாலும் அரசாங்க உத்தியோகம்" என்ற ஒரு தணியாத ஆசை இருக்கிறது. ஏனெனில், அரசாங்க பணிகளில் நல்ல சம்பளம் மட்டுமல்லாமல், பல சலுகைகளும் இருக்கின்றன.

அரசு பணிகளில் உச்சபட்ச பணி, இந்திய ஆட்சி பணி என்று கூறப்படும் ஐ.ஏ.எஸ் பணிதான். மத்திய அரசாங்கத்திலும், மாநில அரசிலும் நிர்வாகத்தில் உயரிய பணி அதுதான். அதனால்தான், இளைஞர்களுக்கு இது ஒரு கனவு பணியாக இருக்கிறது.


தலையங்கம்
தினத்தந்தி
30.8.2023 (புதன்கிழமை)
ஐ.ஏ.எஸ். தேர்வு எழுத ஊக்கமளிக்கும் 'நான் முதல்வன்' திட்டம்!


ஆண்டுதோறும் மத்திய தேர்வாணைய குழு, சிவில் சர்வீசஸ் என்ற குடிமைப்பணிகளுக்காக ஐ.ஏ.எஸ். உள்பட பல்வேறு அகில இந்திய பணிகளுக்கான தேர்வை நடத்துகிறது. பல ஆண்டுகளுக்கு முன்புவரை தமிழ்நாட்டில் இருந்துதான் அதிக மாணவர்கள் இந்த தேர்வில் வெற்றி பெற்ற நிலைமாறி, இப்போது மிகக்குறைவான எண்ணிக்கையிலேயே தேர்ச்சி விகிதம் இருக்கிறது.

நிறைய பேர் தேர்வாக வேண்டும் என்ற நோக்கத்தில், இந்த ஆண்டு தமிழக பட்ஜெட்டில் குடிமைப்பணி தேர்வுகளுக்கு தயாராகும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு உதவும் நோக்கில், ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீட்டு தேர்வின் வாயிலாக தேர்வு செய்யப்படும் ஆயிரம் மாணவர்களுக்கு, 10 மாதங்களுக்கு ரூ.7,500 மாதாந்திர ஊக்கத்தொகை அறிவிக்கப்பட்டது.

இந்த திட்டம் இப்போது தமிழ்நாட்டு திறன் மேம்பாட்டு கழகத்தால் செயல்படுத்தப்படுகிறது. மதிப்பீடு தேர்வில் கலந்து கொள்ள எதிர்பார்த்ததற்கு மேலாக 50 ஆயிரத்துக்கு மேல் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்று, திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குனர் இன்னசென்ட் திவ்யா கூறினார்.

இந்த மாணவர்களுக்கு 1092023 அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் மதிப்பீட்டு தேர்வு நடக்கிறது. இடஒதுக்கீடு முறையை பின்பற்றி ஆயிரம் மாணவர்கள் அவர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, சென்னையிலுள்ள அகில இந்திய குடிமை பணி பயிற்சி தேர்வு மையத்திலும், மதுரை, கோயம்புத்தூரில் இயங்கிவரும் அண்ணா குடிமைப்பணி பயிற்சி நிலையங்களிலும் சேர்க்கப்படுவார்கள்.

அரசு எடுக்கும் இந்த முயற்சிகளால் மாதம் ரூ.7,500 ஊக்கத்தொகை பெறும் ஆயிரம் மாணவர்களில் இருந்து, நிறைய பேர் இந்த ஆண்டு குடிமைப் பணி தேர்வில் வெற்றிபெற வாய்ப்பு இருக்கிறது என்ற வகையில், 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்துள்ள இந்த முனைப்பு பாராட்டுக்குரியது.

இதுமட்டுமல்லாமல், முதல்நிலை தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு, முதன்மை தேர்வுக்கு தயாராக ரூ.25 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நிறைய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற அகில இந்திய பணி அதிகாரிகளை ஏழை, நடுத்தர குடும்பங்களில் இருந்து கொண்டுவர இந்த ஊக்கத்தொகை நிச்சயம் உதவும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## க.வே. செழியன்

## ஆகஸ்ட் 31 (2022)



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

1975ஆம் ஆண்டு தனது பகுதியில் உதயசூரியன் நற்பணி மன்றம் தொடங்கி, பின்னர் பெரியார் எழுச்சி மன்ற காப்பாளராகவும், பின்னர் வட்டக் கழகத்தில் பகுதி பிரதிநிதியாகவும் திருவல்லிக்கேணி பகுதி துணைச் செயலாளராகவும், பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து, அதனைத் தொடர்ந்து பகுதிக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றிவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"திருவல்லிக்கேணியில் கழகம் வளர்த்த உண்மைத் தொண்டர்" என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# நெல்லை மண்டல தி.மு.க. பொறியாளர் அணி கூட்டம்!

நெல்லை, ஆக. 31-

நெல்லை மண்டல தி.மு.க பொறியாளர் அணி ஆலோசனை கூட்டம் பாளையங்கோட்டை ஆர்யாஸ் ஏ.சி மஹாலில் பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாநில பொறியாளர் அணி செயலாளர் கு. கருணாநிதி சிறப்புரையாற்றினார்.

நெல்லை மண்டல பொறுப்பாளர்,மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் சி.பிரதீப் மற்றும் மாநில துணைச் செயலாளர் வே.உமாகாந்த் ஆகியர் முன்னிலை வகித்தனர்.

தலைமை கழகம் அறிவித்தகலைஞர்நூற்றாண்டு விழாவை தி.மு.க. பொறியாளர் அணி சார்பாக மாநிலம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொறியியல் கல்லூரிகளில் பேச்சுப்போட்டி, கவியரங்கம், பட்டிமன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை நெல்லை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் அருணன் செய்திருந்தார். நெல்லை மத்திய மாவட்ட துணை அமைப்பாளர் அருள்வின் ரெற்றிக்கோ நன்றி கூறினார்.



நாடாளுமன்ற நிலைக்குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையிலான நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் வட்டம், விளாச்சேரி கிராமத்தில் களிமண் பொம்மை தயாரிக்கும் தொழில் கூடம் மற்றும் ஒத்தக்கடை வேளாண் கல்லூரியில் விவசாய தொழில் முனைவோர் பாதுகாப்பு மையத்தினை (MABIF) பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா மற்றும் அதிகாரிகள் உள்ளனர்,

### துரை.கி.சரவணன் தலைமை

# கடலூர் மண்டல கழக பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கு.கருணாநிதி சிறப்புரையாற்றினர்!

*கடலூர், ஆக. 31 -*

*கடலூர் மண்டல கழக பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம், வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், 25-08-2023 அன்று நடைபெற்றது.*

*கடலூர் மண்டலத்திற்கு உட்பட்ட கடலூர் கிழக்கு, மேற்கு, விழுப்புரம் வடக்கு, தெற்கு, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த கழக பொறியாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம், மாநில பொறியாளர் அணி தலைவரும், முன்னாள் எம்.எல்.ஏவுமான துரை.கி.சரவணன் தலைமையில் நடைப்பெற்றது.*

*கடலூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ப. அப்பு. சந்திரசேகரன் வரவேற்புரையாற்றினார். மாநில துணை செயலாளர் வேல்.உமாகாந்தி, சி.பிரதீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு. கருணாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.*

*கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அனைத்து பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகளில் பேச்சுப் போட்டிகள், கவியரங்கம், பட்டி மன்றங்கள் உள்ளிட்ட போட்டிகளை நடத்தி அதில் வெற்றிப் பெறுபவர்களை மாநில அளவில் நடைப்பெறும் போட்டிகளில் பங்கேற்க செய்து, பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும் நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளை நடத்துவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.*

*இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டவர்கள் குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் வி.சிவக்குமார், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், ஜேம்ஸ் விஜயராகவன், வடலூர் நகரமன்ற தலைவர் சு.சிவக்குமார், நகர கழக செயலாளர் த.தமிழ் செல்வன், நகர மன்ற துணை தலைவர் சுப்பு ராயலு,*

*கடலூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் ஜி. பி.ஸ்ரீராமன், எஸ்.டி.சரவணன், கே.பி.எம்.கார்த்தி, ரே.கபேரன், எ.விக்னேஸ்வரன், து.ராஜராஜன், ம. னோத்குமார், கடலூர் மேற்கு மாவட்ட நிர்வாகிகள் என்.கார்த்திகேயன், கனக.செந்தில்நாதன், பாண்டுரங்கன், செம்பியன், நிரஞ்சன், ராம்சிங்,*

*மயிலாடுதுறை மாவட்ட நிர்வாகிகள் ஆர்.ராஜேஷ். ஜி.பி.கார்த்திகேயன். இரா. காழி.கலைவாணன், எம். ஜெமின், ஜி.வி.ஆர்.கார்த்திகேயன், இரா.சீத்தாராமன், சு.சிற்றரசன், எஸ்.ஜெயசந்திரன், எம்.நிக்கிலேஷ், கே. இளம்பரிதி,*

*விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் எஸ். சுரேஷ், வி.கே.கிருஷ்ணமூர்த்தி, புகழ்.செல்வகுமார், துரை.ஸடாலின், எம். பிரசாத், பி.ஆனந்தகுமார், டி.செந்தில்குமார், ஏ.ரீகன் ராஜ், விழுப்புரம் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் சி. சக்தி சரவணன், பெ.ஏழுமலை, சொ.செந்தில்முருகன், ஜி.பி.எஸ்.முருகன், செ.ரசூல் பாஷா, ப.சிவப்பிரகாசம், த.வெங்கடேசப் பெருமாளர், வே.மலையரன், த.மோகன்தாஸ், கி.பிரபாகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.*

### திருவல்லிக்கேணி பகுதி அவைத் தலைவர்

# க.வே. செழியன் முதலாம் ஆண்டு அமைதிப் பேரணி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - நே.சிற்றரசு - தயாநிதிமாறன் எம்.பி. துவக்கி வைக்கின்றனர்!

*சென்னை, ஆக. 31 -*

*திருவல்லிக்கேணி பகுதி அவைத் தலைவர் மறைந்த க.வே. செழியன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டை அமைதிப் பேரணியும் சமபந்தி விருந்தும் இன்று (31.8.2023) நடைபெறுகிறது.*

*அமைதிப் பேரணி இன்று (31.8.2023) காலை 7 மணிக்கு இராயபேட்டை வி.எம். தெரு - பெரியார் சிலை அருகிலிருந்து புறப்படுகிறது. சமபந்தி விருந்து இன்று பிற்பகல் 12 மணியளவில் பூரம் பிரகாசம் தெருவில் நடைபெறுகிறது.*

*அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் பேரணி மற்றும் சமபந்தி விருந்தை தொடங்கி வைக்கின்றனர்.*

*பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தலைமை வகிக்கவும், மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.என். துரை, வி.என். ராஜன் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மாமன்ற உறுப்பினர் வே. கமலா செழியன், ரவி ராஜ்குமார், ஆர்.பத்மாவதி, ஆர். ரஞ்சித் குமார், எல். பாலு, எஸ். ரவீந்திரன் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சிகளில் இரா. உமாபதி, ஆர். சின்னி கிருஷ்ணன், ஆனந்த சீனிவாசன், உசேன், டாக்டர் ரப்பானி மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்கின்றனர்.*

*நிகழ்ச்சி ஏற்பாடுகளை -119வது வட்டச் செயலாளர் க.வே. மோகன் செய்து வருகிறார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். சேகர்

**ஆகஸ்ட் 31 (2020)**



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வட்டச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, நகர இளைஞர் அணி அமைப்பாளர், மூன்று முறை குமாரபாளையம் நகரச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

குமாரபாளையம் நகர்மன்ற உறுப்பினராக இரண்டு முறையும், 2006ல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கலை-இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் திராவிட தமிழ்ப் பள்ளி நிகழ்ச்சி!

சென்னை, ஆக. 31 –

சென்னை கிழக்கு மாவட்டம் – கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் கலைஞர் 100 – 31வது நிகழ்வாக, நாளை(01.09.2023–வெள்ளிக் கிழமை) மாலை 6 மணி அளவில், சூளை அங்காளம்மன் கோவில் அருகில், திரைவானின் விடிவெள்ளி! திராவிட தமிழ் பள்ளி! என்ற தலைப்பில், மாவட்ட அமைப்பாளர் புரசை ஜி.தாமோதரன் தலைமையில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் தலைவர் பி.கே.சேகர்பாபு மற்றும் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை யில் நடைபெறுகிறது.

இவ்நிகழ்வில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் மற்றும் நியமன குழு உறுப்பினர் சொ.வேலு, எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், மாவட்ட துணைச் செயலாளர் புனிதவதி எத்திராசன், கழக அயலக அணி துணை செயலாளர் பரிதி இளம்சுருதி, மாவட்ட மகளிர்–தொண்டர் அணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் அ.நிர்மலா தேவி மற்றும் கோ.மணி, 108வது வட்ட கழக செயலாளர் எஸ். சுந்தர்ராசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் க.வினோத், ஆர்.டி.சங்கர்நானா, நெசவாளர் அணி மாவட்ட தலைவர் கே.கோகுல், மற்றும் சிறப்பு பொதுக் குழு உறுப்பினர் கா.நந்தீஸ்வரன் கலந்து கொள்கின்றனர்.

இதில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட தலைவர் நடிகர் வாகை சந்திரசேகர், துணை தலைவர் நடிகர் வாசு விக்ரம், கழக மக்கள் செய்தி தொடர்பு பிரிவு துணை தலைவர் திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோர், தலைமை செயற்குழு உறுப்பினர் புகழுரை ஆற்றுகின்றனர். மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், ப.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் கலந்து கொள்கின்றனர்.

இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் சேப்பாக்கம் கே.ராஜி, எல். பாண்டுரங்கன், எம்.ஜி. செல்வம், டி.இந்திரஜித், கணல் கே.கங்கா, ஆர்.பி ரமேஷ், எஸ்.துளசி குருபரன், எல்.ராமச்சந்திரன், ச. மோகன்ராஜ், எஸ். அன்புச்செல்வம், கே.ராமமூர்த்தி (எ) குட்டி, எஸ்.ஏ முகமது உசேன், எஸ்.பாண்டியன், ந.இளமுருகு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர். நிகழ்வின் இறுதியில் ந.பாலு 78அ வட்ட கழக செயலாளர் மற்றும் சு.மனோகர் 78–வது வட்ட கழக செயலாளர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

# அச்சம் தரும் கருத்துக் கணிப்புகள்! சமையல் எரிவாயு விலை குறைப்பு!

## கடந்த நான்கு ஆண்டுகளாக ரக்ஷா பந்தன் வரவில்லையா?

மக்களவைத் தேர்தல் குறித்த பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளியாகி வரும் நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் முன்கூட்டியே நடப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றன.

அதன் எதிரொலியாகவே, நேற்றைய தினம் மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர், ரக்ஷா பந்தன் பண்டிகையை முன்னிட்டு, நாட்டின் பெண்களுக்குப் பரிசளிக்கும் விதமாக, சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை இருநூறு ரூபாய் குறைக்க பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து 2019, 2020, 2021, 2022 ஆண்டுகளில் எல்லாம் ரக்ஷா பந்தன் வந்த போதெல்லாம் குறைக்கத் தோணலியா? 2024 மக்களவைத் தேர்தல் வரும் போதுதான் எரிவாயு சிலிண்டர் விலையை குறைக்கத் தோணுகிறதோ? என்று நெட்டிசன்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஆனால், இதன் பின்னணியில் வருகின்ற கருத்துக் கணிப்புகள் பா.ஜ.க மீதான அதிருப்தியை பறைசாற்றி வருவதால் எடுக்கப்பட்ட முடிவென்றும், மேலும் பா.ஜ.க. வின் டேமேஜ் கூடும் முன்னரே, இந்தாண்டு இறுதியிலேயே மக்களவைத் தேர்தலை நடத்த திட்டமிடுவதாக நம்பத் தகுந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது.

ஏற்கனவே, எதிர்வரும் 2024 மக்களவைத் தேர்தல் குறித்து பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளியாகி உள்ளன.

இதில் சில கருத்துக் கணிப்புகள் ஆளும் பா.ஜ.க.விற்கு மீண்டும் வாய்ப்புக் கிடைக்கும் என்று கூறி வந்த நிலையில், பா.ஜ.க.வுக்கு இந்த முறை மெஜாரிட்டி கிடைக்காது என்று PCSurvey sIndia அதாவது Political Critic என்ற அமைப்பு இன்னொரு கருத்துக் கணிப்பை வெளியிட்டு உள்ளது.

அதில், பா.ஜ.க.வின் என்.டி.ஏ. கூட்டணி 255 இடங்களையும், எதிர்க்கட்சிகளின் "இந்தியா" கூட்டணி 225 இடங்களையும் மற்ற கட்சிகள் 63 இடங்களையும் கைப்பற்றும் என்று இந்த அமைப்பு வெளியிட்டுள்ள கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது.

மாநில வாரியாக மக்களவைத் தேர்தலில் வெளியாகும் முடிவுகளில், தமிழ்நாட்டில் 38 இடங்களை தி.மு.க காங்கிரசின் இந்தியா கூட்டணி வெல்லும் என்றும், அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி ஒரே ஒரு இடத்தில் வெல்லும் என்றும் இந்தக் கருத்துக் கணிப்பில் தெரிவித்துள்ளது.

ஸ்மால் பாக்ஸ் இந்தியா சர்வே என்ற அமைப்பும் ஒரு புதிய கருத்துக் கணிப்பை வெளியிட்டுள்ளது. அதில், தமிழ்நாட்டில் தி.மு.க.வின் இந்தியா கூட்டணி 36 இடங்களையும்,

பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயகக் கூட்டணி 03 இடங்களையும் கைப்பற்றும் என்று கூறியுள்ளது. தமிழ்நாட்டில் கடந்த மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 38 இடங்களில் வென்றது. அ.தி.மு.க. ஒரே ஒரு இடத்தில் வென்றது.

இந்த முறை தி.மு.க. கூட்டணி இரண்டு இடங்களை இழக்கும்.

பா.ஜ.க. கூட்டணி கூடுதலாக மேலும் இரண்டு இடங்களைப் பெறும். அதாவது தமிழ்நாட்டில் இருந்து பா.ஜ.க. கூட்டணிக்கு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருவார்கள் என்று கூறப்பட்டு உள்ளது. இவர்கள் தனிப்பட்ட பா.ஜ.க. கட்சியா, அ.தி.மு.க. கட்சியா என்பது தெரிவிக்கப் படவில்லை.

மொத்தமாக மக்களவை கருத்துக்கணிப்பு :

மொத்த இடங்கள் : 543

மெஜாரிட்டி பெறத் தேவையான இடங்கள் : 272

இந்தியா கூட்டணி : 243

பா.ஜ.க.வின் தேசிய ஜனநாயகக் கூட்டணி : 255

மற்றவை : 45 கைப்பற்றும் என்று கூறியுள்ளது.

மக்களவைத் தேர்தல் குறித்த பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளியாகி வரும் நிலையில் பா.ஜ.க.விற்கு ஆறு விஷயங்கள் வரும் மக்களவைத் தேர்தலில் எதிராக திரும்பும் வாய்ப்புகள் உள்ளன.

1. சீக்கிய சமூகத்தினர் முன்பு போல பா.ஜ.க.விற்கு வாக்களிக்கும் வாய்ப்பு குறைவு.

2. பட்டியலின மற்றும் மலைவாழ் பழங்குடியினர் சமூகத்தினர் 2019 இல் செய்தது போல் அதிக எண்ணிக்கையில் வாக்களிக்கும் வாய்ப்பு குறைவு.

3. வேளாண்மைத் தொழிலை நம்பி வாழ்வாதாரம் கொண்ட விவசாயிகள் 2019 இல் வாக்களித்தது போல் அதிக எண்ணிக்கையில் வாக்களிக்க வாய்ப்பில்லை.

4. மோடிஜி மட்டும் பா.ஜ.க. மீது இளைஞர்கள் மத்தியில் அதிருப்தி அடைந்துள்ளனர்.

5. NRC மற்றும் CAA பிரச்சினைகள் இல்லாத காரணத்தால் 2024 இல் மதப் பிளவு குறைவாக உள்ளது.

6. பாலகோட் தாக்குதல் போன்ற உணர்ச்சிக் காரணி இந்தத் தேர்தலில் காணவில்லை.

இந்த ஆறு விஷயங்கள் பா.ஜ.க.வுக்கு எதிராக திரும்பலாம் என்று கூறப்படுகிறது.

இது தவிர மூத்தக் குடிமக்கள் பெற்று வந்த சலுகைகளை நிறுத்தியது, மல்யுத்த வீரர்கள் பிரச்சினையில் மௌனம் சாதித்தது, மணிப்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட கலவரத்தை தடுக்கத் தவறியதுடன் அம்மாநில மக்களை இதுநாள் வரை சென்று பிரதமர் மோடி சந்திக்காதது, அருணாச்சலப் பிரதேசம் பகுதிகளில் அத்துமீறும் சீனாவின் நடவடிக்கை குறித்து கண்டும் காணாது இருப்பதும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் எதிர்ப்பு அலையாக பார்க்கப்படுகிறது.

இதுதவிர, மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்துவதற்காக, 26 எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து "இந்தியா" என்றக் கூட்டணியை உருவாக்கி உள்ளன. இந்தக் கூட்டணியின் மூன்றாவது கூட்டம் வரும் ஆகஸ்ட் 31 மற்றும் செப்டம்பர் 1 ஆம் தேதிகளில் மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் நடைபெற உள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. இதில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் கலந்து கொள்ள உள்ளார்.

இந்தியாவில் அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இதில் வெற்றி பெற்று ஹாட்ரிக் சாதனை படைத்து மூன்றாவது முறையாக மத்தியில் ஆட்சியைப் பிடிக்கும் முனைப்பில் பா.ஜ.க. செயல்பட்டு வருகிறது. எதிர்பக்கம் பா.ஜ.க.வை வீழ்த்தும் முனைப்பில் எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன.

காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், ஐக்கிய ஜனதாதளம், ராஷ்ட்ரிய ஜனதாதளம், சமாஜ்வாடி, ஆம்ஆத்மி, தி.மு.க உள்ளிட்ட 26 கட்சிகள் இணைந்து 'இந்தியா' எனும் கூட்டணியை உருவாக்கி உள்ளன.

இந்தக் கூட்டணி இணைந்து வலிமை அடைந்து வருகின்றன. கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற 2ஜி அலைக்கற்றை குறித்த சி.ஏ.ஜி. அறிக்கை வெளியிட்ட 1,76,000 கோடி இழப்பு என்றக் கருத்தை நாடாளுமன்றத் தேர்தலில் பிரச்சாரமாகப் பயன்படுத்தினர்.

ஆனால், கடந்த ஒன்பதரை ஆண்டுகளாக ஆட்சி நடத்தி வரும் பா.ஜ.க. வின் ஏழரைச் சனி ஆட்சியில், ஏழு துறைகளில் மட்டுமே ஏழரை லட்சம் கோடி ரூபாய்க்கு இழப்பு என்று சமீபத்தில் சி.ஏ.ஜி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்ட விவகாரம் வரும் தேர்தலில் மோடிக்கு எதிராக பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

மக்களவைத் தேர்தல் குறித்த பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளியாகி வரும் நிலையில் நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றன.

அதன்படி இந்த வருட இறுதியில் தேர்தலை நடத்த அல்லது அடுத்த வருடம் தொடக்கத்தில் தேர்தலை நடத்த மோடி திட்டமிட்டு வருகிறாராம். இதற்கு பின்வரும் காரணங்கள் சொல்லப்படுகின்றன.

1. இந்தியா கூட்டணி மேலும் வலிமைடையாமல் தடுக்க முடியும்.

2. இந்தியா கூட்டணி முறையாகத் திட்டங்களை வகுக்கும் முன் தேர்தலை நடத்தலாம்.

3. கள நிலவரம் எதிரணிக்கு ஆதரவாக மாறும் முன் தேர்தலை சந்திக்க முடியும் உள்ளிட்ட காரணங்களால் அமைச்சரவையைக் கலைத்துவிட்டு தேர்தலை சந்திக்க மோடி திட்டமிட்டு வருகிறாராம்.

இதன் எதிரொலியாகவே சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை குறைத்து அறிவித்துள்ளது என்று கூறப்படுகிறது. ஒரு வழியாக மோடிக்கு தேர்தல் ஜூரத்தை எதிர்க்கட்சிகளின் கூட்டணியான "இந்தியா" உருவாக்கியுள்ளது என்றால் அது மிகையல்ல.

**நியூ வணக்கம் தமிழ்நாடு**
**30,08,2023**






கடலூர் மாவட்ட ஆட்சியரகத்தில், இந்திய ஒன்றியத்தின் மூவர்ணக் கொடியை 100 அடி உயரத்தில் ஏற்றுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசு சார்பில் கொடிக்கம்பம் அமைக்கப்படவுள்ளது. அதற்காக ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று முன்தினம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசில், தமிழ்நாட்டின் ஒவ்வொரு துறையும் சாதனைச் சரித்திரம் படைத்து வருகிறது. அந்த வகையில், கடலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் அரசுத் திட்டப்பணிகள் தொடர்பான விளக்கக் காட்சி, கடலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. வேளாண் மற்றும் உழவர் நலன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, ஊரக வளர்ச்சித்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், தோட்டக்கலைத் துறை, காவல்துறை, தீயணைப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகள் ஒவ்வொன்றிற்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்று, அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த திட்டங்கள் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்தார். இந்த விளக்கக் காட்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த அதிகாரிகள், அலுவலர்கள் பணியாளர்களைப் பாராட்டினார். வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கோ. அய்யப்பன் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.




கலைஞர் 100 1924 - 2023
ஆகஸ்ட் 31, மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
திருவள்ளூர் மாவட்ட அரசு வளர்ச்சி பணிகள் ஆய்வு
மற்றும்
இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் – ஆவடி
வருகை தரும்...
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக... வருக...
மாண்புமிகு இராணிப்பேட்டை ஆர்.காந்தி
கைத்தறி (ம) துணி நூல்துறை அமைச்சர் – இராணிப்பேட்டை மாவட்ட கழகச்செயலாளர்
ஆவடி சா.மு.நாசர் MLA.,
மு.அமைச்சர் – மத்திய மாவட்ட கழகச்செயலாளர்
திருத்தணி எஸ்.சந்திரன் MLA.,
மேற்கு மாவட்ட கழகச்செயலாளர்
டி.ஜெ.கோவிந்தராஜன் MLA.,
கிழக்கு மாவட்ட கழகச்செயலாளர்
ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட தி.மு.க.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பலக்கனூத்து ஊராட்சி, ஒண்டிவாடநாயக்கன் பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளி கட்டடத்தை நேற்று முன்தினம் (29.08.2023) திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ப.க.சிவகுருசாமி உட்பட பலர் உள்ளனர்.



தூத்துக்குடி வருகைதந்த சுற்றுலாத்துறை அமைச்சர் இராமச்சந்திரனுடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பெ.கீதாஜீவன் வ.உ.சி. துறைமுகத்தின் தெற்கே உள்ள முள்ளக்காடு கடற்கரை பகுதியில் கடல்நீர் சாகச விளையாட்டுகள் தொடங்குவது குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் சுற்றுலாத்துறை இயக்குநர் சந்தீப் நந்தூரி,மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், சார் ஆட்சியர் கௌரவ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் அஜய் சீனிவாசன் மற்றும் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், மாமன்ற உறுப்பினர் ஆ.பாலகுருசாமி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில்

# ரூ.65.50 லட்சத்தில் முடிவுற்ற கட்டிடப் பணிகள்!

## மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார்!

திண்டுக்கல், ஆக. 31 -

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி ரூ.65.50 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற கட்டடப் பணிகளை பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, பலக்கனூத்து, கே.புதுக்கோட்டை, குருநாத நாயக்கனூர் மற்றும் முரு நெல்லிக்கோட்டை ஊராட்சி பகுதிகளில் ரூ.65.50 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற கட்டடப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி தலைமையில் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இதில் ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பலக்கனூத்து ஊராட்சிக்குட்பட்ட ஒண்டிவாடநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளி கட்டடம், கே.புதுக்கோட்டை ஊராட்சியில் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடை, குருநாத நாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளி கட்டடம், முருநெல்லிக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட ஆசாரிபுதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பள்ளிக்கட்டடம் என மொத்தம் ரூ.65.50 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகள் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை கடைக்கோடி மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி, இந்தியாவிலேயே தலைசிறந்த முதலமைச்சராக திகழ்கிறார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுக்காக ரூ.600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஆத்துார் சட்டமன்ற தொகுதிக்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**விதிகளின்படி அனைவருக்கும் உரிமைத் தொகை!**

அரசு பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 17.50 இலட்சம் பள்ளி மாணவ, மாணவிகள் பயனடைகின்றனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், திட்டமிட்டபடி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செப்டம்பர் 15ஆம் தேதி துவக்கி வைக்கப்படவுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இதுவரை 1.62 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அரசு விதித்துள்ள விதிகளின்படி அனைவருக்கும் உரிமைத்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளை மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பலக்கனூத்து ஊராட்சியில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று குடிநீர் திட்டப்பணிகள், சாலைப்பணிகள் என பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளுக்கு கடந்த 2 ஆண்டுகளில் ரூ.61.34 இலட்சம் நிதி வரப்பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கே.புதுக்கோட்டை ஊராட்சியில் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நியாய விலைக்கடைகளில் பொதுமக்களுக்கு தரமான குடிமைப்பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ப.க.சிவகுருசாமி ,கிழக்கு மாவட்டக் கழக பொருளாளர் சத்தியமூர்த்தி, துணைத் தலைவர் செல்வகுமார் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் தி சுப்புலட்சுமிசண்முகம்,ரெட்டியார்சத்திரம் ஒன்றியச் செயலாளர் மணி, ஊராட்சி மன்றத் தலைவர் செல்வராணி, ஈஸ்வரி தமிழ்ச்செல்வன், வெள்ளையன், ரமேஷ், சின்னு என்ற வி முருகன் வட்டார வளர்ச்சி அலுவலர் மலரவன், கிருஷ்ணன், வட்டாட்சியர் வடிவேல்முருகன், அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### அம்பத்தூர் ஆவின் வளாகத்தில்

# அமைச்சர் த.மனோதங்கராஜ் மரக்கன்றுகள் நட்டார்!

## பசுமை வளாகமாக மாற்ற நடவடிக்கை!

சென்னை, ஆக. 30 -

பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் நேற்று (29-08-2023). அம்பத்தூர் ஆவின் வளாகத்தை பசுமை வளாகமாக மாற்ற மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் நேற்று 29-08-2023. அம்பத்தூர் பால்பண்ணை வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு வைத்து பண்ணை வளாகத்தை பசுமையாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டார்.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் பால்வளத்துறை அமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். ஏற்கெனவே பால் பண்ணை வளாகங்களை பசுமைமிக்க வளாகங்களாக மாற்றி அமைக்க வேண்டும் என்று கூறி இருந்தார்.

அதை நடைமுறைப்படுத்தும் விதமாக நேற்று (29-08-2023) அம்பத்தூர் ஆவின் வளாகத்தை பசுமை நிறைந்த வளாகமாக மாற்ற மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தார். மொத்தம் ஆயிரம் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதில் புங்கை, பூவரசு, இலுப்பை, மகிழம், நாவல், மருதம், நாட்டு அத்தி உட்பட 16க்கும் மேற்பட்ட வகைகள் அடங்கும்.

# நிலவின் தென்பகுதியில் ஆக்சிஜன், அலுமினியம், கால்சியம்! ரோவர் உறுதி!

சென்னை,ஆக.30-

நிலவில் தென்துருவத்தில் ஆக்சிஜன், அலுமினியம், கால்சியம் இருப்பதை ரோவர் விண்கலம் உறுதி செய்துள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள இஸ்ரோ, சல்ஃபர், இரும்பு, குரோமியம், சிலிக்கான், டைட்டானியம், மாங்கனீசு உள்ளிட்டவை இருப்பதை ரோவர் உறுதி செய்துள்ளது.

லேசர் ஸ்பெக்ட்ரோஸ்கோப் கருவி மூலம் ரோவர் நிலவில் உள்ள தனிமங்களை கண்டறிந்ததாக இஸ்ரோ தகவல் தெரிவித்துள்ளது.

### கட்சி, ஆட்சியை கட்டுக்கோப்புடன் நடத்துவதில்

# கலைஞரின் உருவாகவே மு.க.ஸ்டாலின் காட்சியளிக்கிறார்!

## விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஆக. 31 -

பல்வேறு சோதனைகளை சாதனைகளாக மாற்றி ஜனநாயகத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் பேணிக் காப்பவராக தி.மு.க தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் உயர்ந்து நிற்கிறார்.



ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முதல்வருக்கு பொன்குமார் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்து, ஆறாவது ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஐந்தாண்டு காலத்தில் அவர் சந்தித்த சோதனைகள் அதனை சாதனைகளாக மாற்றிய சாதுர்யம், கட்சியையும், ஆட்சியையும் கட்டுக்கோப்புடன் நடத்தி வரும் பாங்கு, கூட்டணி கட்சிகளை ஒருங்கிணைத்து, அரவணைத்து செல்லும் விதம், இவை அனைத்தும் தலைவர் கலைஞர் அவர்களின் உருவாகவே தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் காட்சியளிக்கிறார்.

தலைவர் கலைஞருக்கு பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை கட்சியின் தலைவராகவும், ஆட்சியின் தலைவராகவும் அவர் பல்வேறு சோதனைகளையும் நெருக்கடிகளையும் சந்தித்து வருகிறார். ஆனால் சோதனைகளைக் கண்டு துவண்டு விடாமல் அதனை லாவகமாக கையாண்டும் தேவைப்படும் இடங்களில் துணிச்சலோடு எதிர்த்த நின்றும் வென்றும் காட்டி தன்னுடைய தலைமைத்துவப் பண்பை இந்த நாட்டிற்கு உணர்த்தியுள்ளார். கட்சியின் தலைவராக இருந்து கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வலிவான கூட்டணி அமைத்து மகத்தான வெற்றியை பெற்று இந்தியாவையே திரும்பி பார்க்க வைத்தார். அதன் பிறகு நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் வென்று தமிழ்நாட்டின் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் ஒன்றிய அரசு கொடுத்து வரும் தொல்லைகளுக்கு அளவே இல்லை.

இந்த தமிழ் மண்ணுக்கு, தமிழ் மக்களுக்கு, தமிழ் மொழிக்கு எப்போதெல்லாம் துரோகம் எந்த திசையில் இருந்து வந்தாலும் அதை எதிர்த்து நிற்கிற தைரியம், துணிச்சல் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எப்போதும் உண்டு என்பதை தளபதியார் தலைமையிலும் நிரூபித்து காட்டப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் அடாவடித்தனமான செயல்களால் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இல்லாத மாநிலங்களில் எல்லாம் அந்த ஆட்சியை அகற்றுவதற்கும் அந்த ஆட்சிக்கு தொல்லை கொடுப்பதற்கும் சாம, தான, பேத, தண்டம் என அனைத்து வகைகளையும் கையாண்டு வருவதை இந்த நாடு அறியும். அதே முறைகளை தமிழ்நாட்டிலும் நடைமுறைப்படுத்தி வருவதை கண்கூடாக பார்க்கிறோம். அதற்கு ஆளுநர் ஒரு பெரும் கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகிறார். மாநில அரசின் திட்டங்களுக்கு ஒத்துழையாமை, நிதி ஒதுக்கீடு செய்வதில் ஓரவஞ்சனை, மாநில அரசின் மக்கள் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்காமல் எவ்வளவோ தொல்லைகள் கொடுத்தாலும் அவைகளை எல்லாம் தவிடு பொடி ஆக்கி, தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்கிக் காட்டிய பெருமை முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உண்டு. அதைத்தான் கடந்த ஆண்டு இந்தியா டுடே நாளேடு நடத்திய ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், தொழில், சட்டம் ஒழுங்கு, விவசாயம் போன்ற 12 தலைப்புகளில் ஆய்வு செய்த அந்த ஏடு இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்பது துறைகளில் முதன்மை பெற்ற விளங்குகிறது என்பதை வெளிப்படுத்திருக்கிறது. இதுதான் திராவிட மாடல் ஆட்சியின் சாதனை.

அறிவு சார்ந்த அடுத்த தலைமுறையை உருவாக்குவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு திட்டம், மகளிருக்கு இலவச பேருந்து பயண திட்டம், உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1000 வழங்கும் திட்டம், மாதம் தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், இந்நுயிர் காக்கும் 48 மணிநேர அரிய திட்டம் இவையெல்லாம் ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்களின் நீடிப்பு அல்ல ஒரு முதலமைச்சரின் தனி சிந்தனையில் ஏற்பட்ட திட்டங்கள் ஆகும். இப்படிப்பட்ட அரிய திட்டங்களால் தமிழ்நாட்டு மக்களின் தனி மனித வருமானம் உயர்ந்து, பொருளாதார வளர்ச்சி பெற்றிருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட ஒரு சிறந்த ஆட்சியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடுத்து வருகிறார்கள்.

சமூக நீதி, பெண்களுக்கு சம உரிமை, சாதி மத வேறுபாடற்ற நிலை, பிறப்பால் அனைவரும் சமம், எல்லோருக்கும் எல்லாம் என்கிற கொள்கைகளை உள்வாங்கிய திராவிடம் என்பது தந்தை பெரியாருக்கு பின் தமிழ்நாட்டில் மறைந்து விட்டது என்று எண்ணியவர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கொள்கையை தூக்கிப் பிடித்தார்கள். அண்ணாவின் மறைவிற்கு பிறகு மகிழ்ச்சி கொண்ட சனாதான சக்திகளுக்கு தலைவர் கலைஞர் ஒரு சாட்டை அடியாக விளங்கினார். கலைஞரின் மறைவுக்கு பிறகு தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் உள்ள சனாதன கும்பல் இனி திராவிடத்திற்கு இடமில்லை என்று மகிழ்ச்சியுற்ற நிலையில் அந்த திராவிடத்தை மற்ற தலைவர்களை விட தூக்கி பிடிக்கக் கூடிய ஆற்றல், தொடர்ந்து அந்த கொள்கையை அடுத்த நிலைக்கு கொண்டு சென்று நடைமுறைப்படுத்தக் கூடிய தைரியம் தனக்கு உண்டு என்று காட்டியவர் திமுக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆவார்.

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை கண்டு பல்வேறு மாநிலங்கள் மிரண்டு கிடந்த நிலையில் ஒன்றிய அரசின் தவறான, ஜனநாயக விரோத, சமூக நல்லிணத்திற்கு எதிரான செயல்பாடுகளை சம்மட்டி கொண்டு அடித்து சனாதான சக்திகளை எதிர்த்து நின்றவர் தளபதி மு.க. ஸ்டாலின் ஆவார். தளபதி அவர்களின் செயல்பாடுகளை பார்த்த பிறகு தான் இந்திய அளவில் பல்வேறு தலைவர்களுக்கு ஒரு நம்பிக்கையும் தைரியமும் ஏற்பட்டது. அதனுடைய விளைவுதான் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிற இந்தியா (ஐ.சூ.னு.ஐ.ஹ) கூட்டணி என்பதை எவரும் மறந்திட முடியாது. ஆகவே மாநில அளவிலும், ஒன்றிய அளவிலும் ஜனநாயகத்தை காக்கவும் சமூக நல்லிணக்கத்தை பேணவும்; இன, மொழி, மண்ணைக் காக்கவும் உயர்ந்து நிற்கக்கூடிய சிறந்த தலைவராக தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் விளங்குகிறார்கள். ஆறாம் ஆண்டின் அடியெடுத்து வைக்கும் அவரை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வாழ்த்தி வரவேற்கிறது. அவருடைய பணித் தொடர, வெற்றிகளைக் குவித்திட விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி அவருக்கு பக்கபலமாக இருந்து பணியாற்றும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.வி.எம்.அ. பொன்மொழி
### ஆகஸ்ட் 31 (2017)



பள்ளிப்பருவமாகிய 1965–ல் தான் பயின்ற பள்ளி மாணவர்களை ஒன்று திரட்டி, இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்.

ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி முதல் அமைப்பாளர், மாவட்ட மாநாட்டு தொண்டர் படைத் தலைவர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி தலைவராகவும், கலைஞர் பட்டுக் கூட்டுறவு சங்க இயக்குநராகவும், திருவள்ளூர் பட்டுக் கூட்டுறவு சங்க தலைவராகவும் பொறுப்பேற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“இவரின் நலப்பணிகள் என்றென்றும் மக்கள் மனதில் வீற்றிருக்கும். அவர் விட்டுச் சென்ற கழக பணிகள் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொண்டரின் உள்ளத்திலும் குடியிருக்கும்” என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி
### ஆகஸ்ட் 31 (2012)



தென்பாண்டிச் சீமையில் கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கமுதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

கமுதி ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். ‘மிசா’வில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

“அனைவரிடமும் அன்பு காட்டி, அயராது உழைத்து கழகத்தை வளர்த்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

3000-க்கும் மேற்பட்ட மருத்துவர் - மருத்துவப் பணியாளர்களுக்கு

# விரைவில் பணி நியமன ஆணைகள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

## அரசு ஸ்டான்லி மருத்துவமனை நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, ஆக.31-

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் மிக விரைவில் 3000க்கும் மேற்பட்ட மருத்துவர் மற்றும் மருத்துவ பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குவார்கள் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு மருத்துவ வசதிகளை தொடங்கி வைத்து தெரிவித்தார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (29.8.2023) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு மருத்துவ வசதிகளை திறந்து வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.30 இலட்சம் செலவில் உணர்திறன் மற்றும் செயல்திறன் மேம்பாட்டு பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த உணர்ச்சி ஒருங்கிணைப்பு சிகிச்சை பூங்காவை பொறுத்தவரை இதன் மூலம் சிந்தனை ஒருமுகப்படுத்துதல், ஐம்புலன் உணர்வுகளை மேம்படுத்துதல், அறிவாற்றலை தூண்டுதல், மூளை செயல்பாட்டை அதிகரித்தல், விழிப்புணர்வை அதிகரித்தல், தசை வளர்ச்சி இயக்கம் மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பயன்கள் இதன் மூலம் கிடைக்கவிருக்கிறது. இந்த மருத்துவமனையை பொறுத்தவரை 50 முதல் 60 வரையிலான ஆட்டிசம் ஸ்பெக்ட்ராம் குறைபாடு உள்ள குழந்தைகள் இதன் மூலம் பயன்பெற இருக்கிறார்கள். அந்தப் பூங்கா நேற்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஆட்டிசம் ஸ்பெக்ட்ராம் குறைபாடு உள்ள குழந்தை களுக்கு பெரிய அளவிலான பயனுள்ளதாக இருக்கும்.

**ரூ.10 இலட்சம் செலவில் சிறு பிராணிகள் கூடம்**

அதேபோல் இன்று புனரமைக்கப்பட்ட பிராணிகள் கூடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. மாணவர்கள் பயன்பெறும் வகையில் தேசிய மருத்துவ ஆணையத்தின் பரிந்துரையின்படியும், ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் சிறு பிராணிகள் பராமரிக்கப்படும் கூடம் ஒன்று அமைக்கப்பட்டு அது தற்போது திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. எலி, முயல் போன்ற சிறு பிராணிகள் அதில் தங்க வைக்கப்பட்டு அதன் மூலம் மாணவர்களுக்கான ஒரு கற்றல் திறனை அவர்களுக்கு ஏற்படுத்துகின்ற வகையில் அது புனரமைக்கப்பட்டு இருக்கிறது. தேசிய மருத்துவ ஆணையத்திடம் ஐந்து ஆண்டுகளுக்கான அங்கீகாரம் இந்த மருத்துவமனைக்கு கிடைத்திருக்கிறது. அப்படி தேசிய மருத்துவ ஆணையத்திடம் ஐந்து வருடத்திற்கான அங்கீகாரத்தை பெற்று புனரமைக்கப்பட்ட அந்த சிறு பிராணிகள் கூடம், ரூபாய் 10 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. தற்போது பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**ரூ.112 கோடி மதிப்பீட்டில் Critical Care Block கட்டிடம் விரைவில் தொடக்கம்**

எதிர்வரும் ஆண்டுகளுக்கு இங்கே கூடுதல் வசதிகளாக ரூபாய் 112 கோடி மதிப்பீட்டில் critical Care Block ஒன்று கட்டப்பட இருக்கிறது. தரைத்தளம் மற்றும் ஆறு தளங்களுடன் கூடிய அந்த கட்டிடம் மிக விரைவில் கட்டப்பட இருக்கிறது. அதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்பட இருக்கிறது. விரைவில் அந்தப் பணிகள் தொடங்கப்படவிருக்கிறது. தரைத்தளம் மற்றும் 6 படுக்கைகளுடன் கூடிய கட்டிடத்தில் 300 படுக்கை வசதிகள் கொண்ட கூடுதல் வசதி ஸ்டான்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஏற்படுத்தப்படவிருக்கிறது.

அதேபோல் இங்கு செவிலியர் பயிற்சி பள்ளி இருக்கின்றது. செவிலியர் பயிற்சி பள்ளியில் படிக்கின்ற மாணவிகள் தங்கி பயில்வதற்கு உரிய கட்டிடம் என்கின்ற கோரிக்கை நீண்ட நாட்களாக விடுக்கப்பட்டது. 400 மாணவியர்களுக்கு தங்கும் வசதியுடன் கூடிய கட்டிடம் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கிறது. அக்கட்டிடத்திற்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மிக விரைவில் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, டெண்டர் கோரப்பட்டு விரைவில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மருத்துவத்துறையில் 1020 மருத்துவ பணியிடங்களுக்கு மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்ய இருந்த சூழ்நிலையில் ஒரு சில மருத்துவ மாணவர்கள் தமிழ்வழியில் பயின்றவர்களுக்கு முன்னுரிமை தரக்கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தனர். மேலும் இத்தேர்வில் சுமார் 85% பேர் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்களுக்கு பணி நியமனம் ஆணை தருவதற்குள் 14 மருத்துவர்கள் மீண்டும் நீதிமன்றத்திற்கு சென்றுவிட்டார்கள். நீதிமன்றத்தில் கோவிட் காலங்களில் பணியாற்றிய மருத்துவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று கூறி நீதிமன்றத்திற்கு சென்றிருக்கிறார்கள்.

ஏற்கெனவே தமிழ்நாடு அரசினை பொறுத்தவரை, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செய்யாத அளவில் கோவிட் காலங்களில் பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் போன்ற பல்வேறு மருத்துவ பணியாளர்களுக்கும் District Health Society மூலமாக எடுக்கப்பட்ட வேலை வாய்ப்புகளில் 20 மதிப்பெண்கள் கூடுதலாக வழங்கி அவர்களை பணியில் அமர்த்தியிருக்கிறோம். ஏறத்தாழ 4000க்கும் மேற்பட்ட பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் 14 மருத்துவர்கள் MRB தேர்விலும் கோவிட் காலங்களில் பணியாற்றியதற்கு முன்னுரிமை தரவேண்டும் என்று நீதிமன்றத்திற்கு சென்றிருந்தார்கள். நீதிமன்றம் இத்துறைக்கு எந்த விதமான அறிவுரைகளும் தராத நிலையில் துறையின் சார்பில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, கோவிட் காலங்களில் 2 ஆண்டுகளுக்கு தொடர்ச்சியாக பணியாற்றியவர்களுக்கு 5 மதிப்பெண்களை தரலாம் என்று முடிவெடுத்து, அரசாணை வெளியிட்டோம். அந்த அரசாணை வெளியிடப்பட்ட அடுத்த நாள் பத்திரிக்கைகளில் மருத்துவர்களின் அறிக்கை, அந்த அறிக்கை என்னவென்றால் இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய மருத்துவர்களுக்கு 5 மதிப்பெண்கள் என்றால் 6 மாதம், 7 மாதம் பணியாற்றிய மருத்துவர்கள் இருக்கின்றோம், ஆகையால் எங்களுக்கும் இந்த மதிப்பெண்கள் பிரித்து தந்தால் நன்றாக இருக்கும் என்று ஒரு அறிக்கை விடுத்திருந்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பொறுத்தவரை, ஒருவர் பாதித்தால் கூட பாதிப்பு பாதிப்புதான் என்று நினைத்து அவர்களின் கோரிக்கையினை நிறைவேற்றுங்கள் என்று இத்துறைக்கு உத்தரவிட்டார்கள்.

இந்த நிலையில் அவர்கள் பணியாற்றிய காலங்களுக்கான மதிப்பெண்கள் பிரித்து அரசாணை வெளியிடப்பட்டது. கோவிட் காலங்களில் பணியாற்றிய மருத்துவர்கள் அவர்கள் பணிபுரிந்த மருத்துவமனைகளில் கோவிட் காலங்களில் பணியாற்றிய சான்றிதழ்களை சமர்ப்பித்து அதற்குரிய மதிப்பெண்களை பெற்றுக் கொள்ளலாம். அப்பணிகள் முடிந்தவுடன் 1021 மருத்துவர்கள் பணியிடங்கள் நிரப்பப்படும்.

இதற்கிடையில் 1000 மருத்துவர்களுக்கான காலிப்பணியிடங்கள் காலியாக இருக்கின்றது. இதையும் MRB மூலமாக விரைவில் நிரப்பப்படும். இதற்கிடையில் MRBயில் 983 மருந்தாளுநர்களுக்கான தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் 43,000 பேர் தேர்வு எழுதியிருக்கிறார்கள். மேலும் 1066 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கும் தேர்வு முறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிகபட்சமாக இன்னும் ஒருசில மாதங்களில் 3000க்கும் மேற்பட்ட மருத்துவப்பணியாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி ஆணையினை வழங்குவார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர் சாந்திமலர், பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழுத் தலைவர் இளைய அருணா, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர். பாலாஜி, மருத்துவத்துறை பேராசிரியர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** அண்ணே; சென்னை உயர்நீதி மன்றம், தந்தை பெரியார் அவர்களைப் பற்றியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றியும், போற்றிப் புகழ்ந்து தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்களே ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; நாவடக்கம் இல்லாத நாலாந்தர மனிதர் ஒருவரின் வழக்கிலேதான், பெரியாரையும், கலைஞரையும் குறிப்பிட்டுப் பாராட்டப்பட்டுள்ளது.**

**“பெரியார்,திராவிட இயக்கத்தின் தந்தை எனப் போற்றி மதிக்கப்படுபவர். ஆண் - பெண் சமத்துவமின்மை, சாதி வேறுபாடுகள் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடியவர். சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர். வாழ்நாள் முழுதும், சாதி - மத - கடவுள் அற்ற புத்தம் புதிய பகுத்தறிவு சமூகத்தினை உருவாக்கிட ஓயாது உழைத்தவர்”**

**“தமிழ் நாட்டில் உள்ள ஏனைய அரசியல் கட்சிகள், பெரியாரின் இலட்சியத்தை மூலாதாரமாகக் கொண்டிருப்பவை. பகுத்தறிவு எண்ணம் கொண்டோர் அனைவராலும் வழிபடக் கூடியவர்”**

என்று தந்தை பெரியார் அவர்களைப் பற்றியும்;

**“தமிழ் நாட்டு மக்களின் நன் மதிப்பை நிரம்பப் பெற்றிருப்பவர் கலைஞர். அவரது புகழ்ப் பெயரை மாசுபடுத்திட முயன்றால்,மாநிலத்தில் மக்களிடையே எதிர்ப்பும், போராட்டமும் ஏற்படும்”**

என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றியும்;

சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பில் குறிப்பிட்டுப் பாராட்டி உள்ளது.

**தந்தை பெரியாரும், தமிழினத் தலைவர் கலைஞரும், இனி வரும் காலம் முழுமைக்கும் ஏற்ற அத்தியாவசியமான பேராளுமைகள் என்பதை எவராலும் மறுதலித்திட இயலாது!**

புதுடெல்லியில் - ஒன்றிய அமைச்சரிடம்

# தென்னை நார் தொழில்களை மறுவகைப்படுத்திட கோரிக்கை!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் தெரிவித்தார்!

புதுடெல்லி, ஆக.31-

புதுடெல்லியில் நேற்று முன்தினம் (29.08.2023) ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களை தமிழ்நாடு அரசின் சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சந்தித்து தென்னை நார் தொழில்களை மறு வகைப்படுத்துவது தொடர்பான கோரிக்கை வழங்கினார்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் பல்வேறு தென்னை நார் தொழில் உற்பத்தி சங்கங்கள், கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, வாரியத் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூத்த அதிகாரிகளுடன் 8.8.2023 அன்று, சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் கூட்ட அரங்கில் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தென்னை நார் தொழிற்சாலைகளின் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டு அவற்றிற்கு தீர்வுக்கான அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும் தற்போதைய நிலையில் இத்தொழிற்சாலைகள் வெள்ளை வகைப்பாட்டில் தான் தொடர்கிறது என தெளிவுபடுத்தப்பட்டது.

மேலும் ஜூலை 2023-இல் வெளியிடப்பட்ட மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தொழிற்சாலைகளுக்கான வரைவு வகைப்பாடு அறிவிக்கையின் மீது தென்னை நார் சங்கங்களும் முறையீடு செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு மாநில தென்னை நார் தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு தனது மனுவில், தென்னை நார் தொழில்களை ஆரஞ்சு என வகைப்படுத்துவதால் தென்னை நார் தொழில்களின் தற்போதைய சிரமங்கள் மற்றும் வீழ்ச்சி குறித்து கீழ்வருமாறு எடுத்துரைத்துள்ளது.

தமிழகத்தில் சுமார் 4.44 லட்சம் ஹெக்டேர் தென்னை சாகுபடி நடைபெற்று வருவதாகவும், ஒரு ஹெக்டேருக்கு 11,526 காய்கள் உற்பத்தித்திறன் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. தென்னை நார் தொழில் பல்வேறு பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது.

1. தென்னை நார்
2. தென்னை நார் பித் பல்வேறு வடிவங்களில்
3. தென்னை நார் நூல்
4. சுருண்ட தென்னை நார்
5. தென்னை நார் ஜியோ டெக்ஸ்டைல்ஸ்
6. தென்னை நார் டஃப்ட் மேட்ஸ்
7. தென்னை நார் பானைகள், தென்னை நார் தொங்கும் கூடைகள் போன்ற தோட்டப் பொருட்கள்

தென்னை நார் தொழிலை மீண்டும் ஆரஞ்சு வகைக்கு மாற்றினால், மின் சுமை தேவைகள் மாற்றம், கான்கிரீட் தளம் அமைத்தல், விவசாயிகளின் வருவாய் வீழ்ச்சி போன்ற இடர்பாடுகளை சந்திக்க நேரிடும்.

தென்னை நார் தொழில் உற்பத்தி செயல்முறை பின்வருவனவற்றை உள்ளடக்கியது

1. உரித்தல் / சிதைத்தல் / அடித்தல் மூலம் தேங்காய் மட்டையிலிருந்து தென்னை நார் மற்றும் உமி பிரித்தெடுத்தல்
2. சலித்தல்
3. இயற்கை சூரிய ஒளியில் உலர்த்துதல்
4. கட்டுகளாக கட்டுதல்

மேலும், உற்பத்தி செயல்முறையில் பொதுவாக எந்த இரசாயனங்களும் பயன்படுத்தப்படுவதில்லை மற்றும் தென்னை நார் நனைக்கப் பயன்படுத்தப்படும், நீர் மீண்டும் மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படுகிறது; அதனால் தொழிற் கழிவுநீர் ஏதும் வெளியேற்றப்படுவதில்லை.

தென்னை நார் மற்றும் உமி ஆகியவை இயற்கையான சூரிய ஒளியின் உதவியுடன் முற்றத்தில் உலர்த்தப்படுகின்றன, மேலும் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக உலர்த்தும் முற்றத்தின் எல்லையில் வலை தடுப்புடன் கூடிய சுற்றுச்சுவர் அமைக்கப்படுகிறது. எனவே, உற்பத்தி செயல்முறையின் அடிப்படையில் தென்னை நார் தொழில்களை மறு வகைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது

தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர், தலைவர், தமிழ்நாடு மாநில தென்னை நார் சங்கங்களின் கூட்டமைப்பு இணைச் செயலாளர், தமிழ்நாடு மாநில தென்னை நார் சங்கங்களின் கூட்டமைப்பு, கோகோமன்ஸ் கோயம்புத்தூர் மாவட்ட தென்னை நார் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் மற்றும் துணைத் தலைவர், பொருளாளர், ஈரோடு தென்னை நார் உற்பத்தியாளர் சங்க பொருளாளர், பழநி மாவட்ட தென்னை நார் உற்பத்தியாளர் சங்க தலைவர், ஈரோடு மாவட்ட தென்னை நார் உற்பத்தியாளர் சங்க தலைவர், டான் கோயர் இயக்குனர், உடுமலை சங்க பிரதிநிதி, மடத்துக்குளம் சங்க பிரதிநிதி ஆகியோருடன், நேற்று (29.08.2023) ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றுத்துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், அவர்களை சந்தித்து, தென்னை நார் தொழில் உற்பத்தி செயல்முறைகளின் அடிப்படையில் தென்னை நார் தொழிற்சாலைகள் பின்வருமாறு வகைப்படுத்த வேண்டும் என்ற தமிழ்நாடு மாநில தென்னை நார் சங்கங்களின் சம்மேளனத்தின் கோரிக்கை மனுவை அளித்தார்.

1. தென்னை நார் உற்பத்தி (உலர் செயல்முறை அல்லது ஈர செயல்முறை) மற்றும் அனைத்து தென்னை நார் பொருட்களின் உற்பத்தி வெள்ளை வகை
2. தென்னை நார் உற்பத்தி (இரசாயன செயல்முறை அல்லது சாயம் பூசும் செயல்முறை) ஆரஞ்சு வகை

இக்கூட்டத்தில், தென்னை நார் தொழில்களின் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள கோரிக்கையை பரிசீலிக்கவும், தென்னை நார் தொழில்களை மறு வகைப்படுத்துவது குறித்த அறிவிக்கையின் இறுதி வடிவம் வெளியிடும் போது, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

# குரு - சிஷ்யன்



**சிஷ்யன்:** குருவே, 2014ல் 410/- ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட சமையல் எரிவாயு, கடந்த 9 ஆண்டுகளில் 3 மடங்காக விலை அதிகரித்து ரூ.1,118.50/- ஆக உயர்ந்தது.

தற்போது ரூ.200/- குறைத்துள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளதே, குருவே?

**குரு : சிஷ்யா, விஸ்வரூபம் எடுத்துள்ள ஊழலை மறைக்க, மக்களை திசைதிருப்ப, 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஒரு வெள்ளோட்டம்.**

**பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கில் விலை கொடுத்து வாங்கி வந்தவர்கள், பா.ஜ.க.வினால் பாதிக்கப்பட்ட மக்கள் அவ்வளவு எளிதில் மறக்கமாட்டார்கள்.**

**திருமதி. பி. விஜயலட்சுமி**

இந்தியாவில் ஆண்டுக்கு 10 லட்சம் பேர் பாதிப்பு !கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையில்

# அமைதியாக சாதனை படைக்கும் ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனை!

சென்னை, ஆக. 31 -

மனித உடலில் கல்லீரலின் பங்கு என்பது இன்றியமையாதது. அது, மனித உடலின் 500 முக்கிய இயக்கங்களில் அதன் பங்களிப்பு முக்கியம். அந்தவகையில், நமது உணவில், புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின்கள், மினரல்கள் ஆகியவற்றின் செரிமானம் நடைபெறுகிற ஒரே இடம் கல்லீரல் மட்டுமே. அதுமட்டுமின்றி கல்லீரலுக்கு உள்ள சிறப்பு அம்சமே, அதற்கு பாதிப்பு உண்டாகும் போது அது தன்னைத்தானே சரி செய்து கொள்ளும். மேலும், நகம் வெட்டினால் மீண்டும் வளர்வது போன்று கல்லீரலும் வளரும். மனிதனின் வாழ்க்கை முறை, உணவு முறையில் ஏற்படும் மாற்றம் காரணமாக கல்லீரல் பாதிப்பு தொடங்குகிறது.

உலகளவில் கல்லீரல் நோயால் ஆண்டுதோறும் இரண்டு மில்லியன் பேர் இறக்கின்றனர். அதாவது 25 இறப்புகளில் ஒருவர் கல்லீரல் பாதிப்பால் இறக்கின்றனர். இதில் மூன்றில் 2 பங்கு பாதிக்கப்படுவது ஆண்கள் மட்டுமே என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்தியாவில் ஆண்டுதோறும் 10 லட்சம் பேர் கல்லீரல் அழற்சி நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிவரத்தின்படி, இந்தியாவில், கல்லீரல் பாதிப்பு காரணமாக இறப்பவர்களின் எண்ணிக்கை 10வது இடத்தில் உள்ளது. மேலும், 5 இந்தியர்களில் ஒருவருக்கு கல்லீரல் நோய் வரலாம் என்கிறது உலக சுகாதார அமைப்பு. கல்லீரல் பாதிப்பில் முக்கிய பங்கு வகிப்பது மது குடிப்பது. மதுப்பழக்கம் உள்ளவர்கள் தான், கல்லீரல் அழற்சி நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், கடந்த 2006ம் ஆண்டு முதல் கல்லீரல் அழற்சிக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. ராஜிவ் காந்தி மருத்துவமனையில் ஏறக்குறைய தினமும் 200 புற நோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர். உள் நோயாளிகளுக்காக 90 படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் முதல்முறையாக கடந்த பிப்ரவரி மாதம் கூலி தொழிலாளர் ஒருவருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை படைக்கப்பட்டது.

ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை அரசு பொது மருத்துவமனை, கோவை அரசு பொது மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை ஆகிய 5 மருத்துவமனைகள் மற்றும் குரோம்பேட்டை ரேலா மருத்துவமனையும் இணைந்து கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

அதனடிப்படையில், ரூ. 7 கோடியில் நவீன அரங்கம் அமைக்கப்பட்டு முதல் முதலாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து இது வரை 4 கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக கல்லீரல் அரசு மருத்துவமனை கல்லீரல் துறை இயக்குனர் பிரேம்குமார் கூறியதாவது:

ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் கல்லீரல் நோய் அறுவை சிகிச்சைக்காக 6 படுக்கைகள் உள்ளது. இதுவரை, 4 பேருக்கு கல்லீரல் மாற்றுஅறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது. இணை நோய் உள்ளவர்களுக்கும் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. ஒருவருக்கு அறுவை சிகிச்சை செய்ய 2 முதல் 3 வாரம் தேவை. காரணம், அவர்களுக்கு 32 வகையான பரிசோதனைகள் செய்யப்பட்டு 15 துறையின் மருத்துவர்கள் ஒப்புதல் அளித்த பிறகுதான் ஒரு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

கல்லீரல் அறுவை சிகிச்சைக்கு தனியார் மருத்துவமனையில் ரூ.30 லட்சம் முதல் ரூ.35 லட்சம் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் மூலம் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை இலவசமாக செய்யப்படுகிறது.

ஹெபடைடீஸ் ‘சி’ யால் பாதிக்கப்படும் நபர்களை எளிதில் குணப்படுத்திவிடலாம். ஆனால், கல்லீரல் ஹெபடைடீஸ் ‘பி’யால் பாதிக்கப்பட்டால், பாதிப்பை கட்டுப்படுத்தலாம் அல்லது குணப்படுத்தலாம். எனவே, பொதுமக்கள் கல்லீரலை பாதுகாப்பது அவசியமான ஒன்றாகும்.

# கழகத் தலைவராக தளபதியார்... அடி முடி காண முடியாத பிரம்மாண்டம்..!

தலைவர் தளபதியார் அவர்கள் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று இன்றோடு மிகச் சரியாக ஐந்து ஆண்டுகள் நிறைவு பெற்று ஆறாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கின்றார்..!

ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட ஓர் பேரினத்தின் விடிவெள்ளியாய் முளைத்து... அந்த இனத்திற்கு விடியலைத் தந்து, அவ்வினத்தின் பிள்ளைகளை இந்த பூமிப்பந்திலிருந்து நிலவுத்தரை வரையிலும் உயரத்திற்கு கொண்டு சென்றதில் முழுமையாக சாதித்துக் காட்டிய பெருமிதத்தோடு...

இதோ அடுத்த மாதம் தனது பவள விழா கொண்டாட்டங்களை துவக்கவிருக்கின்ற, பேரியக்கத்தின் தலைமைப் பொறுப்பு என்பது அவ்வளவு எளிதானது அல்ல..!

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பினை தன் தோள்களில் சுமந்து கடந்த ஐந்து ஆண்டுகளில்... ஐம்பது ஆண்டுகள் புடம்போடப்பட்டு அமர வைக்கப்பட்ட தலைவர் தளபதியார் தனது பொறுப்பை எந்த அளவிற்கு திறம்பட கையாண்டிருக்கின்றார் என்பதன் ஒரு ஸ்கேன் ரிப்போர்ட் தான் இது..!

இந்த அறிக்கை என்பது... அவர் தலைவராகப் பொறுப்பேற்றதிலிருந்து கழகத்திற்கு அவர் ஈட்டித் தந்த நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி, உள்ளாட்சி தேர்தல் வெற்றிகள், சட்டமன்ற தேர்தல் வெற்றிகள்... அதனைத் தொடர்ந்து கழகத்தை ஆட்சிக்கட்டிலில் அமர்த்தி, அதன் தலைவராக... அதாவது ஆட்சித்தலைவர் எனும் முதலமைச்சர் பொறுப்பில் அவர் தமிழ்நாட்டிற்கும், தமிழக மக்களுக்கும் ஆற்றியிருக்கின்ற பணிகள், செயல்படுத்தியிருக்கின்ற திட்டங்கள், ஏற்படுத்தியிருக்கின்ற முன்னேற்றங்களைப் பற்றியெல்லாம், புள்ளிவிவரங்களோடு எடுத்துச் சொல்லுகின்ற பதிவாக இது இருக்காது..!

மாறாக, கழகத்தலைவராக அவர் கழகத்திற்கு ஆற்றியிருக்கக் கூடிய... யாருமே எதிர்ப்பார்க்க இயலாத... யாருமே நம்ப இயலாத... யாராலும் மறுக்க இயலாத சாதனைகளை... இன்னும் சொல்லப்போனால் ஒரே ஒரு முக்கிய சாதனையைப் பற்றித்தான் இங்கே விலாவாரியாக அலசி ஆராயப் போகின்றோம்...!

பேரறிஞர் அண்ணா இந்த இயக்கத்தை 1949 இல் துவங்கிய பொழுது, இந்திய ஒன்றியம் என்பது ஒரு நாடாக... அதாவது குடியரசாக ஆகியிருக்கவில்லை.

இந்தியா குடியரசான பிறகு தேர்தல்கள் வரும்... அதில் பங்கேற்று ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றினால் தான், நம் இனத்திற்குத் தேவையானவைகளை நாமே சட்டமியற்றி, அடிமை விலங்குகளை உடைத்தெறிந்து உண்மையான விடுதலையை அடையமுடியும் என்ற நம்பிக்கையிலேயே தான் அவர் தி.மு.கழகத்தை... தி.க.விலிருந்து பிரிந்து வந்து துவக்குகின்றார்..!

அப்படி துவங்கிவிட்டு அடுத்து வந்த 1952 தேர்தல்களில் அவர் திமு கழகத்தை பங்கெடுக்க வைத்தாரா என்றால் அது தான் இல்லை..!

ஆம்... தேர்தல்களில் தம் இயக்க தம்பிமார்களை, தொண்டர்களை ஈடுபடுத்தும் முன்பாக இயக்கத்தை தமிழ்நாடு முழுவதும், பட்டி தொட்டி வரையிலும்... அமைப்புக்கள் வாயிலாக கட்டமைக்க வேண்டும் என்று முடிவெடுத்து களத்தில் இறங்கினார்..!

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர் கால்கள் தமிழ்நாடு முழுவதும் பயணித்தன... மாநில அமைப்பைத் துவங்கிய நிலையில்.... அடுத்ததாக மாவட்ட அமைப்புக்கள்... நகர, ஒன்றிய, பேரூர்களில் கழக அமைப்புக்களை உருவாக்குதல்... அதனைத் தொடர்ந்து ஊராட்சிகளில் அமைப்புகளை உருவாக்கி முடியும் வரையிலும் அவரது அந்த பயணம் நிற்கவேயில்லை..!

கிட்டத்தட்ட ஆயிரம் நாட்கள் இந்த அதி முக்கிய பணிக்காகவே பேரறிஞர் அண்ணா முழுமையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் என்றால் மிகையில்லை.

**ஒவ்வொரு மாவட்ட அமைப்புகளும் உருவாக்கப்பட்டு அதற்கு கீழே நகர, ஒன்றிய, ஊராட்சி அமைப்புகள் வரையிலும் அவர் ஒவ்வொரு நாளும் அவற்றுக்கான தலைவர், செயலாளர், பொருளாளர், பிரதிநிதிகள், துணைச் செயலாளர்கள் என்று நியமனம் செய்து அறிவிக்க அறிவிக்க...**

**ஒரு முழுமையான பேரியக்கம் மெல்ல மெல்ல உருப்பெறத் துவங்கியது... தாங்கள் தான், தாங்கள் மட்டுமே தான் என்று இறுமாப்புடன் இருந்து கொண்டிருந்த அன்றைய காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட்டுகள் எல்லாம் மெல்ல மெல்ல... தி.மு.கழகத்தை திரும்பிப்பார்க்கத் துவங்கினர்..!**

ஒவ்வொரு அமைப்பையும் உருவாக்க உருவாக்க... அண்ணாவும் அவர் தம்பிமார்களும் அங்கே பொதுக்கூட்டங்கள் நடத்துவது, அரசியல் விழிப்புணர்வு சமூகநீதி நாடகங்கள் நடத்துவது, பாசறைகள் அமைப்பது, படிப்பகங்கள் அமைப்பது... என்று தமிழ்நாடு முழுவதும் மக்களை அரசியல்மயப்படுத்தினார்கள்..!

பேரறிஞர் அண்ணாவின் சாதனைகளிலேயே மிக மிக முக்கியமான சாதனை என்றால் இது தான்..! (கழகத்தைப் பொறுத்தவரை)

கழகத்தின் அமைப்புகள் முழுவதுமாக கட்டமைக்கப்பட்டு, அதன் தொண்டர்கள் அரசியல் விழிப்புணர்வை அடைந்த நிலையில் தான் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டினை 1956இல் திருச்சியில் கூட்டி... கழக தொண்டர்களிடமே நாம் தேர்தலில் பங்கேற்கலாமா என்ற கேள்வியை கேட்டு... அதற்கு ஒரு தேர்தலும் அங்கேயே வைத்து... தொண்டர்களின் ஏகோபித்த ஆதரவோடு அடுத்த ஆண்டு... அதாவது 1957 இல் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் முதன் முறையாக தி.மு.க. பங்கேற்றது..!

இது என்ன அவ்வளவு பெரிய்ய்ய சாதனையா என்று யாராவது கேட்பீர்களேயானால்...

ஆம்... விடுதலை பெற்று குடியரசான இந்திய ஒன்றிய வரலாற்றிலேயே காங்கிரஸ் அல்லா ஒரு மாநிலக் கட்சி, காங்கிரஸை வீழ்த்திவிட்டு முதன் முதலாக ஒரு மாநிலத்தில் ஆட்சியை கைப்பற்றியது என்றால் அது திராவிட முன்னேற்ற கழகம் மட்டுமே. அந்த சாதனையை நிகழ்த்திக் காட்டியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மட்டுமே. அவர் அந்த சாதனையை செய்வதற்கு முக்கிய காரணமாக அமைந்தது, தமிழ்நாடு முழுவதும் தன் இயக்கத்திற்கு கடைகோடி வரையிலும் கட்டமைப்பை உருவாக்கி, மக்களை அரசியல்மயப்படுத்தியது தான்..!

முதன் முதலாக இந்திய ஒன்றியத்தில் ஆட்சியமைத்த மாநிலக்கட்சி என்ற சாதனை மட்டுமல்ல... அதன் பிறகு அவர் உருவாக்கிய இயக்கமோ அல்லது அவர் பெயரில், அவரது கொள்கையை மட்டுமே கடைபிடிப்பதாக சொல்லி உருவாக்கப்பட்ட இயக்கமோ மட்டும் தான் 56 ஆண்டுகளைக் கடந்தும் இன்று வரையிலும் தமிழ்நாட்டில் ஆட்சி செய்ய முடிகின்றது என்ற சாதனைக்கும்... அவர் அமைத்துக் கொடுத்த உட்கட்டமைப்பும் தமிழர்களை அரசியல் விழிப்பு ணர்வுள்ளவர்களாக மாற்றியதும் தான் காரணமாக அமைந்தது..!

சரி; அவர் உருவாக்கிய இயக்கத்திற்கு அண்ணா உட்கட்டமைப்பை உருவாக்கித் தந்தார்... அதனால் அக்கட்சி முதன் முதலாக ஆட்சியைப் பிடித்தது, இன்று அவ்வியக்கம் பவளவிழா கொண்டாடும் தருணத்திலும் ஆட்சியில் இருக்கின்றது.... இதை புரிந்துகொள்ள முடிகிறது...

ஆனால் அவர் பெயரில் துவங்கப்பட்ட ஒரு இயக்கம் எப்படி தமிழ்நாட்டில் ஆட்சியை பிடிக்க முடிந்தது..?! அக்கட்சிக்கான உட்கட்டமைப்பை உருவாக்கியவர் யார்..?! என்று நீங்கள் கேட்க வருகின்ற சந்தேகம் நன்றாக புரிகிறது...!

அந்த இன்னுமொரு கட்சியை துவங்கியவர் நடிகர் எம்ஜி ராமச்சந்திரன். பேரறிஞர் அண்ணா உட்கட்டமைப்பை உருவாக்கி விட்டு, அடுத்த தேர்தலில் போட்டியிடலாம் என்ற தொண்டர்களின் ஆதரவையும் பெற்றுவிட்டு சும்மா உட்கார்ந்துவிடவில்லை.

அன்றைக்கு (அச்சு)ஊடகங்கள் எல்லாம் அவள் கைப்பிடியில், காங்கிரஸ் ஆதரவு நிலைப்பாட்டிலேயே இருந்த நிலையில், தங்கள் இயக்கத்தின் கொள்கைகளையும், ஆளுங்கட்சியின் அவலங்களையும் மக்களிடம் கொண்டு செல்ல அண்ணாவின் கைவசம் இருந்த ஒரே ஊடகம் என்றால் அது மேடை நாடகங்களும், திரைத்துறையும் மட்டும் தான்..!

அந்த இரண்டு துறைகளில் இருந்தும் மக்களிடம் நன்கு அறிமுகமான நடிகர்களை தங்கள் பிராண்ட் அம்பாஸிடராக கொண்டுவர அண்ணா விரும்பிய நிலையில்...

பல்வேறு திரை ஆளுமைகள் தி.மு. கழகத்திற்கு ஆதரவாக களத்தில் இறங்கினர். அப்படி தலைவர் கலைஞர் அவர்களால் தி.மு. கழகத்திற்குள் கொண்டுவரப்பட்டவர் தான் நடிகர் எம்.ஜி. ராமச்சந்திரன்.

இவர் வந்த காரணத்தினால், அதுவரையிலும் திமுக ஆதரவாளராக இருந்து திரைத்துறையில் எம்.ஜி. ஆரின் போட்டி நடிகராக விளங்கிய நடிகர் சிவாஜி கணேசன் அவர்கள், மெல்ல காங்கிரஸ் பக்கமாக கரை ஒதுங்கிவிடுகின்றார்..!

எம்.ஜி.ஆர். படங்களுக்கு தொடர்ந்து திராவிட இயக்க அரசியல் சாயம் கலந்து கலைஞர் எழுதிய வசனங்கள், அவரை தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் ஒரு புரட்சி நடிகராக வலம்வர வைத்தது..!

இந்த நிலையில் தான் அவர் தன்னை பலப்படுத்திக் கொள்ள, தி.மு.க.வின் அமைப்புக்கள் எங்கெங்கெல்லாம் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் தனது ரசிகர் மன்றங்களை படிப்படியாக துவங்குகின்றார். கிட்டத்தட்ட 18 ஆண்டுகாலம் அவர் இதை கொஞ்சம் கொஞ்சமாக செய்து... தி.மு.க. தொண்டர்களின் வீட்டு பிள்ளைகள் எல்லாம், எம்.ஜி.ஆரின் ரசிகராக அவரது ரசிகர் மன்றத்தில் இணைகின்றனர்..!



சௌமியன் வைத்தியநாதன்
திராவிட இயக்க எழுத்தாளர்

ஒரு கட்டத்தில் 1972இல் எம்.ஜி.ஆர். தி.மு. கழகத்திலிருந்து வெளியேறிய பிறகு... தன் ரசிகர் மன்றங்கள் அனைத்தையும் அப்படியே அவர் துவங்கிய கட்சியின் அமைப்புகளாக மாற்றி விடுகின்றார். அதனால் கிட்டத்தட்ட தி.மு.க.வுக்கு இணையான கட்டமைப்பு அவர் கட்சிக்கும் உடனடியாக அமைந்த காரணத்தினால் தான் அவர் கட்சியும் ஆட்சிக்கு வர முடிந்தது.

இந்த முழுமையான உட்கட்டமைப்பு இல்லாத எந்தக் கட்சியாலும் தமிழ்நாட்டில் ஆட்சியமைக்கவே முடியாது. இது தான் உண்மை. அதனால் தான் எம்.ஜி.ஆருக்குப் பிறகு அவர் அளவிற்கோ அல்லது அவரை விட பிரபலமானவராகவோ திகழ்ந்த நடிகர்களான சிவாஜி கணேசன், டி.ராஜேந்தர், பாக்கியராஜ், விஜயகாந்த், கமலஹாசன், ரஜினிகாந்த் உள்ளிட்ட எவருமோ...

அல்லது சினிமா சாராமல், சில பல அரசியல் தலைவர்களால் உருவாக்கப்பட்ட ம.தி.மு.க, பா.ம.க, த.மா.கா., நாதக உள்ளிட்ட எந்தவொரு இயக்கமும் ஆட்சியைப் பிடிக்கும் எல்லைக் கோட்டிற்கு அருகில் கூட வர இயலாமல் போனது..!

நிற்க... அதன் பிறகு நடந்தவைகளை நாம் நன்கறிவோம்..!

**அனைவருமே ஒரு கட்சியை ஆரம்பிப்பார்கள்... அடுத்த ஓரிரு ஆண்டுகளிலேயே தேர்தலில் போட்டியிடுவார்கள்... அதற்குள்ளாக ஊடக வெளிச்சம் அவர்கள் மீது பலமாக பாயும்... பேசுபொருளாவார்கள்... இத்தோடு தி.மு.க. அழிந்தது என்று பரப்புரை செய்யப்படும்... ஆனால் தேர்தலில் மண்ணைக் கவ்விவிடுவார்கள். ஒரு சிலர் ஓரிரு தேர்தல்கள் தாக்குப்பிடித்து... பிறகு ஏதாவது ஒரு கூட்டணியில் பங்கேற்று ஓரிரு எம். எல். ஏக்களுடன் கரை ஒதுங்கிவிடுவார்கள்..!**

**இப்படியான நிலையில் தான் அரை நூற்றாண்டு அசைக்கமுடியாத தலைவராக விளங்கிய தலைவர் கலைஞரின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்கின்றார் தளபதியார் மு.க. ஸ்டாலின் அவர்கள்..!**

அதே சமகாலத்தில் தான் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வரும் தகுதியோடு உட்கட்டமைப்பைக் கொண்டிருக்கும் இன்னுமொரு கட்சியான அ.தி.மு.க... ஓ.பி.எஸ், ஈ.பி.எஸ். என்ற இரட்டைத் தலைமையோடு ஆட்சியில் இருக்கின்றது..!

மு.க. ஸ்டாலின் அவர்கள் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்கும் பொழுது, கழகம் தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆட்சியை இழந்திருந் திருந்து ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து ஆட்சியில் இல்லாமல் இருந்தது. நாடாளுமன்றத்தில் ஒரு மக்களவை உறுப்பினர் கூட கழகத்திற்கு கிடையாது.

இவை அனைத்திற்கும் மேலாக, அரை நூற்றாண்டு கால ஆளுமை மிக்க தலைவரான கலைஞரின் மறைவும் தொண்டர்களிடையே சோர்வையும், எதிரிகளிடம் இறுமாப்பையும், ஊடகங்கள் வாயிலாக பொது மக்களிடம் ஒருவித நம்பிக்கையற்ற தன்மையையும் உருவாக்கி விட்டிருந்தது..!

தமிழ்நாடு அரசியலில் தலைமைக்கு ஒரு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்று எதிரிகளால் ஊடகங்கள் வாயிலாக ஒரு பரப்புரை முன்னெடுக்கப்பட்டு... ரஜினிகாந்த், கமல்ஹாசன் போன்றோரெல்லாம் அரசியல் களத்தில் இறக்கப்பட்டனர்..!

இவை அனைத்தையும் தளபதியார் அவர்கள் புறம் தள்ளி விட்டு, தன் முன்னே ஒரே ஒரு குறிக்கோளை மட்டுமே முழுமையாக வைத்தார். அது தன் கழக தோழர்களை, கலைஞரின் உடன்பிறப்புகள் உற்சாகம் அடையச் செய்வது என்பதே..!

அதற்கு ஒரே வழி, அடுத்த எட்டு மாதத்தில் நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் கணிசமான வெற்றியை ஈட்ட வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்..!?

இதை வென்றெடுக்க அவர் தனித்தனியாக இரண்டு மார்க்கங்களில் பயணிக்கத் துவங்கினார். ஒரு பக்கம், தொண்டர்களை தொடர்ந்து சுறு சுறுப்புடனும், பர பரப்புடனும் வைத்துக் கொள்வது. அதற்காக, அகில இந்திய தலைவர்களை அழைத்து கலைஞர் சிலை திறப்பு விழா நடத்துவது.... முரசொலி பவள விழாவினை நடத்துவது....

மாவட்டங்கள் தோறும், கலைஞர் செயல்பட்ட அனைத்து துறைகளிலும் அல்லது அவர் சாதனை செய்த அனைத்து துறைகளின் சார்பாகவும் தமிழ்நாடு முழுவதும் அந்தந்த துறை வல்லுநர்களை அழைத்து தொண்டர்களை கூட்டி கருத்தரங்கம் நடத்துவது. சென்னையில் இருக்கும் அத்தனை நாளும், தன் இயக்க சகாக்களுடன் சென்று கலைஞர் ஓய்விடத்தில் அமர்ந்து ஆலோசிப்பது...

அங்கே பல்வேறு ஊர்களிலிருந்தும் வரும் கழக தொண்டர்களிடம் அளவளாவுவது... கலைஞர் ஓய்விடத்தை தினம் தினம் விதவிதமான மலர்களால் அலங்கரிப்பது... அதை ஊடகங்கள் வாயிலாக பேசுபொருளாக்குவது...

இப்படி தொடர்ந்து கழக தொண்டர்களை மட்டுமல்லாது, பொது மக்களையும், இளைஞர்களையும் கூட அவர் தி.மு.க. மயப்படுத்தினார். அப்பொழுது ஆளுங்கட்சியாக அ.தி.மு.க. இருந்தாலும், மக்கள் மன்றத்தில் பேசுபொருளாக தி.மு.க.வையே முன்னிலையில் வைத்திருந்தார்..!

இது ஒரு மார்க்க பயணம் என்றால்... இன்னொரு மார்க்கத்தில், அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக... கிட்டத்தட்ட ஒத்த கொள்கைகள் மற்றும் கருத்துகளை உடைய கட்சிகள் அனைத்தையும்... அதன் தலைவர்களிடம் ஒரு சாமான்யனாக... அந்தந்த சிறு கட்சிகளின் தலைவர்கள் இடத்திலிருந்து பார்க்கும் பார்வையாளனாக செயல்பட்டு... பேசி... அற்புதமான கூட்டணியை உருவாக்கினார்..!

அந்தக் கூட்டணி தான் அடுத்து வந்த நாடாளுமன்ற தேர்தலில் ஒரே ஒரு இடம் தவிர்த்து அனைத்து இடங்களையும் வாரிச்சுருட்டி... தமிழ்நாடு வரலாற்றிலேயே 53 சதவிகித வாக்குகளைப் பெற்று அசைக்க முடியாத வெற்றியையும்.... நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய்ய கட்சி என்ற அங்கீகாரத்தையும் தி.மு.கழகத்திற்கு பெற்றுத்தந்தது.... அதாவது தலைவர் தளபதியார் பெற்றுத்தந்தார்...!

அவரது முதல் இலக்கான... தொண்டர்களை உற்சாகம் கொள்ளச் செய்வது என்பது மிக மிக ஆர்ப்பாட்டமாக நடந்தேறியது..! அதன்பிறகு கழகத்தின் வெற்றி என்பது...

கிராமப்புற உள்ளாட்சித் தேர்தல் வெற்றி... சட்டமன்ற தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்தது... (கால் நூற்றாண்டுக்குப் பிறகு மூன்று இலக்கத்தில் தி.மு.க. உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்குள் நுழைந்தது)... நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் வெற்றிகள்... என்று தி.மு.க.வின் தேர்தல் வெற்றிகளை ஒரு தொடர்கதையாக்கி விட்டார்..!

இது ஒரு புறம் நடந்து கொண்டேயிருக்க... இன்னொரு பக்கம் அவர் செய்தது தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் செய்ததற்கு இணையான கழகத்திற்கு செய்த மாபெரும் சாதனை..!

ஆம்... அப்பொழுது சமீபத்தில் தான் அதற்கு



நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக கிட்டத்தட்ட 32 லிருந்து பிரிக்கப்பட்டு 65ஆக உயர்த்தப்பட்ட கழக மாவட்டங்களை மேலும் பிரித்து 72ஆக உயர்த்தினார்.

2014 வரையிலும் 385 ஒன்றிய கழகங்களாக இருந்தவற்றை கிட்டத்தட்ட 700 ஒன்றிய கழகங்களாக பிரித்திருந்த நிலையில்... தளபதியார் பொறுப்பேற்ற பிறகு அவற்றை மேலும் பிரித்து கிட்டத்தட்ட 1000 ஒன்றிய கழகங்களாக உயர்த்தினார்..!

18 ஆக இருந்த சார்பு அணிகளை மேலும் புதிய ஐந்து சார்பு அணிகளை உருவாக்கி 23 ஆக உயர்த்தினார்..! உயர்த்தியது மட்டுமல்லாமல்... இளைஞரணி, தொமுச உள்ளிட்ட ஒன்றிரண்டு சார்பு அணிகள் தவிர்த்து மற்ற அணிகளில் மாவட்ட அமைப்புக்கள் மட்டுமே இருந்த நிலையில்... பெரும்பான்மையான அணிகள் அனைத்திற்கும் ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்ட கழகங்கள் வரையிலும் அமைப்புகளை உருவாக்கினார்..!

12500 ஊராட்சி கழக அமைப்புக்களாக இருந்ததை கிட்டத்தட்ட ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் நான்கு கிளைக்கழகங்களை புதிதாக உருவாக்கி... கிராமங்களின் கடை கோடிகளில் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் புதிய அமைப்புகளை உருவாக்கி விட்டிருக்கின்றார்..!

இவை அனைத்திற்கும் உச்சக்கட்டமாக ஒரு சட்டமன்ற தொகுதியில் சராசரியாக 300 வாக்குச்சாவடிகள் இருந்தால் அதில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் தேர்தல் ஆணைத்திற்கு கழகம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டிய ஒரு வாக்குச்சாவடி முகவர் தவிர்த்து அவருக்கு கீழே பத்து பேர் கொண்ட ஒரு பூத் கமிட்டியை உருவாக்கியுள்ளார். அதில் குறைந்த பட்சம் ஒரு பெண் முகவரும் இருக்கின்றார்..!

ஒரு தொகுதியில் 300 பூத் இருந்தால்... அதில் திமுகவின் சார்பாக ஒரு பெண் உட்பட 11 பாக முகவர்கள் போடப்பட்டுள்ளது. அதாவது ஒரு தொகுதிக்கு இவர்கள் மட்டுமே மூவாயிரத்து முன்னூறு பேர் இருப்பார்கள்..!

அவர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் உள்ள ஒன்றிய, பேரூர், நகர கழகங்களில்... தலைமைக் கழகத்திலிருந்து சார்பு அணிகளின் மாநில துணைச் செயலாளர் ஒருவரை பொறுப்பாளராக நியமித்து மூன்று மாதங்கள் தங்கி... பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் அவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட பாக முகவர்களின் ஒட்டு மொத்த பயிற்சிப் பாசறை கூட்டத்தை கழக இளைஞரணிச் செயலாளர் நடத்தி முடித்துக் கொண்டு வருகின்றார். அதாவது ஒரு கழக மாவட்டத்தில் மூன்று சட்டமன்ற தொகுதிகள் இருந்தால், அதில் கிட்டத்தட்ட பத்தாயிரம் பேரை ஒன்றாகக் கூட்டி அவர் உரையாற்றுகின்றார்...!

இதில் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து கழக மாவட்டங்களையும் கிட்டத்தட்ட 15 மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு மண்டலமாக பிரித்து... ஆக மொத்தம் ஐந்து மண்டலங்களாக பிரித்து... அந்தந்த மண்டலங்களில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் உள்ள அதிகாரப்பூர்வமான பாக முகவரை மட்டும் அழைத்து...

அதாவது ஒரு மண்டலத்திற்கு சராசரியாக 15 ஆயிரம் பாகமுகவர்களை அழைத்து அவர்களுக்கு மட்டும் ஒரு முழுநாள் பயிற்சியை பல்வேறு கழக வல்லுநர்களைக் கொண்டு அளித்து இறுதியாக தலைவர் தளபதியார் அவர்களிடம் உரையாற்றுகின்றார். இதுவரையிலும் இரண்டு மண்டலங்களுக்கான பயிற்சிப்பாசறை முடிந்து விட்ட நிலையில் இன்னும் மூன்று மண்டலங்கள் மட்டுமே பாக்கியுள்ளது. அவையும் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நிறைவு பெறும்..!

இதற்கு முன்பாக தளபதி அவர்கள் தலைவராக பொறுப்பேற்றதிலிருந்து மாவட்ட, ஒன்றிய, கிளை கழகங்கள் மற்றும் சார்பு அணிகளின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்தியதாக சொல்லியுள்ளேன் அல்லவா... அதனால் என்ன பலன் விளைந்துவிடப் போகிறது என்று அரசியல் பால பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்கும் ஒரு தம்பி கேட்கலாம்...

தலைமைக் கழகம் தவிர்த்து மற்ற அமைப்புகள் அனைத்திலுமே அவைத்தலைவர், செயலாளர், துணைச் செயலாளர்கள், பொருளாளர், பிரதிநிதிகள் என்று சராசரியாக 15 நிர்வாகிகள் வரை இருப்பார்கள்.

இந்த இடத்தில் நீங்களே ஒரு கணக்கைத் தோராயமாக போட்டுக் கொள்ளுங்கள்... 72 மாவட்ட கழகம், 150 நகர கழகம், 529 பேரூர் கழகம், 21 மாநகர கழகம், ஆயிரம் ஒன்றிய கழகம், 12ஆயிரத்து ஐநூறு ஊராட்சி கழகம் அதற்கு கீழேகிட்டத்தட்ட 50ஆயிரம்கிளைக்கழகங்கள்... இதைத் தவிர்த்து நகராட்சிகளில் வார்டு கழகங்கள், மாநகராட்சிகளில் பகுதி கழகங்கள் மற்றும் வட்டக் கழகங்கள் என்று....

அத்தனையையும் 15 நிர்வாகிகளால் பெருக்கினால்... சற்றேறக்குறைய 10 லட்சம் நிர்வாகிகள் பேரண்ட் பாடி என்று சொல்லப்படும் தாய் கழகத்தில் மட்டும் இருக்கின்றார்கள்...!

இதைத் தவிர... 23 சார்பு அணிகளிலும் சேர்த்து மொத்தமாக மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட... இளைஞரணி, தகவல் தொழில்நுட்ப அணி, மருத்துவர் அணி போன்ற அணிகளில் ஊராட்சி கழகம் வரையிலும் உள்ள மொத்த நிர்வாகிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 6 லட்சம் பேர் இருக்கின்றார்கள்..!

இதையும் தவிர 234 தொகுதிகளிலும் உள்ள அத்தனை வாக்குச்சாவடிகளிலும் கிட்டத்தட்ட 8 லட்சம் பேர் பாக முகவர்களாக பயிற்சி பெற்று தயார் நிலையில் இருக்கின்றார்கள்...!

அதாவது சற்றேறக்குறைய 25 லட்சம் பேர்... அதாவது கால் கோடி பேர் திராவிடமுன்னேற்ற கழகத்தின் பல்வேறு அமைப்புகளில் நிர்வாகிகளாக, பொறுப்பாளர்களாக மட்டுமே இருக்கின்றார்கள்..!

இவை அனைத்தையும் கடந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும்...

**இன்னும் சொல்லப்போனால் கந்த ஓராண்டில் தி.மு.க. உறுப்பினர்களின் எண்ணிக்கையை 100 சதவிகிதம் அதாவது ஒரு மடங்கு உயர்த்தி... மூன்று மாதங்கள் முன்பாக 2 கோடி தி.மு.க. உறுப்பினர்கள் என்ற இலக்கையும் தலைவர் தளபதியார் சாதித்துக் காட்டியுள்ளார்..!**

**இந்த உறுப்பினர்கள் எல்லாம், ஏதோ பா.ஜ.க. மிஸ்ட் கால் கொடுத்து சேர்க்கப்பட்டது போல் அல்ல. மாறாக ஒவ்வொரு உறுப்பினரும் தலைமைக் கழகத்தால் அவரவரது தனி அலைபேசியில் தொடர்புகொள்ளப்பட்டு வெரிஃபை... அதாவது சரிபார்க்கப்பட்டவர்கள். இதில் ஒரே ஒரு போலி உறுப்பினர் சேர்க்கப்பட்டிருந்தாலும் கூட சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர கழக செயலாளர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள்..!**

**தமிழ்நாட்டில் உள்ள கிட்டத்தட்ட ஐந்தரை கோடியிலிருந்து 6 கோடி வாக்காளர்களில் ஐந்து சதவிகிதம் பேர் தி .மு. கழகத்தின் அதி தீவிர கட்சி நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்களாவே இருக்கின்றனர்.**

அவர்களையும், அவர்களுடைய குடும்பத்தினரையும் உள்ளடக்கி மொத்தம் 2 கோடி வாக்காளர்கள் தி.மு..கவின் உறுப்பினர்களாகவே இருக்கின்றார்கள்... அதாவது மொத்த வாக்காளர்களில் இவர்களின் எண்ணிக்கை சற்றேறக்குறைய 33 சதவிகிதமாகும்..!

மேலே நான் சொல்லியிருப்பது தி.மு.க வின் வாக்கு வங்கி அல்ல.... மாறாக இது தி.மு.க. வினரின் எண்ணிக்கை அல்லது சதவிகிதம்..! அதாவது ஒரு தொகுதியில் வாக்குப்பதிவு முடிந்து வாக்கு எண்ணிக்கை துவங்கினால்...

**தி.மு.க. தனது கணக்கை 70 ஆயிரம் வாக்குகளில் இருந்து தான் துவங்கும். இந்த ஒரு இலக்கினைத் தான், கழக உட்கட்டமைப்பை... மிக மிக மிக துல்லியமாகவும், நுணுக்கமாக வும்... நேர்த்தியுடனும், மிகச் சரியான திட்டமி டலுடனும் செயல்படுத்தி... அதற்கு முன்பு இருந்ததை விட 100 சதவிகிதம் அதாவது முப்பத்தை யாயிரம் வாக்குகளில் இருந்து 70 ஆயிரமாக, தான் தலைவராக பொறுப்பேற்ற ஐந்தே ஆண்டுகளில் தலைவர் தளபதியார் அவர்கள் உயர்த்தியுள்ளார்..!**

ஆனால் அதிமுகவோ, ஜெயலலிதா விட்டுச் சென்ற நிலையிலேயே... அதாவது 35 ஆயிரம் என்ற நிலையிலிருந்து ஒரு படி கூட முன்னேறாமல்...

அதே சமயம்... திமுக தலைவரின் அதிரடி பாய்ச்சலால், அதிமுக தனது மினிமம் பெஞ்ச் மார்க் நிலையையும் இழந்து நின்று கொண்டிருக்கின்றது என்பது தான் இன்றைய கள நிலவரம் மற்றும் யதார்த்தம்..!

தலைவர் தளபதியார் அவர்கள் ஒரு மார்க்கத்தில் கூட்டணிகளை கட்டமைத்து, திட்டமிட்ட அரசியல் பரப்புரைகளை மேற்கொண்டு தொடர் தேர்தல் வெற்றிகளை குவித்து தொண்டர்களை உற்சாகப்படுத்தி...

அந்த உற்சாகத்தின் மூலம் கிடைத்த நம்பிக்கையின் காரணமாகவே... தளபதியார் அவர்கள், கழக உட்கட்டமைப்பை பலப்படுத்த எடுத்த முயற்சிகள் அனைத்திற்கும் தொண்டர்கள் முழுமையான ஒத்துழைப்பையும், கடும் உழைப்பையும் கொடுத்து சாத்தியமாக்கினர்..!

தொலைநோக்குத் திட்டமாக...

திராவிட முன்னேற்றக் கழகத்தை தமிழ்நாட்டில் 50 சதவிகிதத்திற்கும் கூடுதலாக வாக்குகள் பெற்று வெற்றிபெறக் கூடிய நிலையில் இன்றைக்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றார்..!

தளபதி அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்தில் தி.மு.கழகத்தின் சித்தாந்த எதிரியான பா.ஜ.க.வின் ஹெச்.ராஜா இவரை 'ஸ்டாலின் இஸ்மோர் டேஞ்சுரஸ் தென் கலைஞர் என்று கூறி... தளபதியாரின் ஆளுமையை அடையாளப்படுத்தியது எல்லாம் பழங்கதையாகிப் போய்...

**இப்பொழுது, ஆர். எஸ். எஸ். துவங்கிய காலத்திலிருந்து அதன் கொள்கைகளை எந்த தடையுமில்லாமல் கடந்த 9 ஆண்டுகளாக நிறுவிக் கொண்டிருக்கும் ஒன்றிய பிரதமரே... அதாவது 'டிமோ'வே இந்தியாவில் தான் எங்கு சென்றாலும், தி.மு.க. தலைவரை விமர்சித்து விட்டுத்தான் தன் பிரச்சாரத்தை நிறைவு செய்கின்றார் என்றால்...**

தி.மு.க. தலைவராக தளபதியார் அவர்களின் வெற்றி வீச்சு என்பது எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்..!

'டிமோ' ஏன் தி.மு.க. தலைவரைப் பார்த்து அலருகின்றர் என்பதை தனி ஆராய்ச்சிக் கட்டுரையாகவே அடுத்து நாம் பதிவு செய்யலாம்..!

ஆகவே கழக தலைவராக தளபதியார் அவர்களின் செயல்பாடு என்பது சந்தேகமே இல்லாமல் அடிமுடி காண இயலாத விஸ்வரூபம்..!

11 ஆம் ஆண்டு
நினைவேந்தல்...




மிசா
தெய்வத்திரு. **காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி** Ex.,MLA.,
முன்னாள் கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினர்
முன்னாள் கமுதி ஒன்றிய கழக பொறுப்பாளர்.
அன்னாரது நினைவை போற்றி வணங்குகிறோம்...!

**பா.குணசேகரன்** BA.,B.Ed.,
முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்
மாவட்ட வருவாய் அலுவலர் – ஓய்வு

**அருண் குணசேகரன்** Marine Engg.,
மாவட்ட பொறியாளர் அணி தலைவர்
இராமநாதபுரம் மாவட்டம்.

11 ஆம் ஆண்டு
நினைவேந்தல்!




மிசா, கழக முன்னோடி அய்யா,
**S.காதர்பாட்சா வெள்ளைச்சாமி** EX.MLA.,
வாழும் போதும், வாழ்ந்த பிறகும் எடுத்துக்காட்டாய்
நீங்கள் காட்டிய பாதையில் என்றுமே நாங்கள்...

**காதர்பாட்சா முத்துராமலிங்கம்** B.A.,MLA.,
மாவட்ட கழக செயலாளர், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர்

**K.J.பிரவின்** M.Sc.,MSW.,M.Phil.,B.L.,
ஒன்றிய கழக செயலாளர்

**மண்டபம் மேற்கு ஒன்றிய தி.மு.கழகம்**



திருவல்லிக்கேணி பகுதியில்
கழகம் வளர்த்த உண்மைத் தொண்டன்
**க.வே.செழியன்** B.A. அவர்களின்
முன்னாள் பகுதி கழகச் செயலாளர் - பொதுக்குழு உறுப்பினர் - பகுதி அவைத்தலைவர்

**முதலாம் ஆண்டு**
**புகழ் வணக்கம்**

**அமைதி பேரணி** மற்றும் **சமபந்தி விருந்து**

கழக இளைஞரணிச் செயலாளர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
முன்னிலை : மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
(சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர்)

துவக்கி வைப்பவர்
திருமிகு. **நே.சிற்றரசு** M.C.
சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர்
பெருநகர சென்னை மாநகராட்சி திட்டக்குழுத் தலைவர்

என்றும் நினைவுடன்
**ARP.M.காமராஜ்** M.C.
திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர்
ஆளும்கட்சி துணைத் தலைவர்

லயன் **ஆர்.என்.துரை**
மாவட்ட துணைச் செயலாளர்

தோற்றம்: 10.02.1957
மறைவு : 31.08.2022

நாள் : 31.08.2023 வியாழக்கிழமை காலை 7 மணி
புறப்படும் இடம்: பெரியார் சிலை, வி.எம்.தெரு, சென்னை 14

சமபந்தி விருந்து: பகல் 12.00 மணி
பூரம் பிரகாசம் வி.எம்.தெரு, சென்னை 14

நினைவில் வாடும் குடும்பத்தினர்
**வே.கமலா செழியன்** M.C.
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
119வது சென்னை பெருநகர மாமன்ற உறுப்பினர்

டாக்டர் **பூங்கொடி செழியன்**
M.D.S., LASERS (LIA) (Ph.D in CBCT)
Associate Professor, Oral Medicine and Radiologist,
Meenakshi Amman Dental College & Hospital
Laser Consultant, CBCT Radiologist in Aarthi Scans, Chennai

மகன்: **க.வே.மோகன்** வட்ட கழகச் செயலாளர், 119வது வட்ட தி.மு.க.

**திருவல்லிக்கேணி பகுதி தி.மு.க. - சென்னை மேற்கு மாவட்டம்**



33

# இடம் பொருள் கலைஞர்

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **திருநங்கைகள் நல வாரியம்!**



## திருநங்கைகள் நல வாரியம்!

### இந்தியாவுக்குச் சமத்துவப் பாடம்!

*2021-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஓர் அறிவிப்பை பத்திரிகைகளில் வெளியிட்டது.*

அதில், 'திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 2020 பிரிவு -10 (1)-ன் படி, திருநங்கைகளின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கவும், அரசால் உருவாக்கப்படும் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களைப் பெற உதவும் வகையிலும், சம்பந்தப்பட்ட மாநில அரசு திருநங்கைகள் நல வாரியத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது குறித்தும் உரிய நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் 09.10.2020 அன்று அனைத்து மாநில அரசுகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருநங்கைகள் மீது பாரபட்சம் காட்டுவதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கவும், அவர்களது நிலையை உயர்த்தவும், ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகார மளித்தல் அமைச்சகம் திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 2019-ஐ நிறைவேற்றியது. இந்தச் சட்டம் 2020, ஜனவரி 10-ஆம் தேதி அன்று நடைமுறைக்கு வந்தது" என அந்த அறிவிப்புச் சொன்னது.

### முன்னோடி முதல்வர்

மாநில அரசுகளே வாரியத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்துக்கு ஒன்றிய அரசு வருவதற்கு 12 ஆண்டுகளுக்கு முன்னரே திருநங்கை களுக்கான வாரியத்தை உருவாக்கி, **'சமத்துவம் மிக்கது தமிழ்நாடு'** என இந்தியாவுக்கே அடையாளம் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

திருநங்கைகளும் இந்தச் சமுதாயத்தின் அங்கம் என்பதை உணர்த்தும் விதமாகவும், அவர்களின் நலன்களை உறுதி செய்வதற்காகவும் 2008-ஆம் ஆண்டில் ஏப்ரல் 15 -ஆம் தேதி அன்று 'தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரிய'த்தைத் தொடங்கி வைத்தார் கலைஞர்.

### நிதி ஒதுக்கீடுகள்

தொடங்கியது மட்டுமல்ல, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையில், அவர்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகளையும் கழக அரசு வழங்கியது. அந்த நல வாரியத்தின் மூலமாக 3,878 பேர் கணக்கெடுக்கப்பட்டு, அவர்களில் 2,328 பேருக்கு அடையாள அட்டைகளும், 1,238 பேருக்குக் குடும்ப அட்டைகளும், 133 பேருக்குத் தொகுப்பு வீடுகளும், 100 பேருக்குத் தையல் இயந்திரங்களும், 482 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், 585 பேருக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவ அட்டைகளும் கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே வழங்கப்பட்டன. அதற்கென முதற்கட்டமாக 2009-ஆம் ஆண்டில் ரூ.50 லட்சமும், 2010-ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்தார்.

40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற ஏழைத் திருநங்கைகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கவும் வழிவகை செய்தார்.

> முடங்கிக் கிடந்த இந்த நலவாரியத்துக்கு கழக அரசு பொறுப்பேற்றதும், 12 திருநங்கைகள் மற்றும் ஒரு பெண் உட்பட 13 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். திருநங்கைகளுக்கான ஓய்வூதியம் ரூ.1,500 ஆக உயர்த்தப்பட்டது.

### பெயர் மாற்றம்

திருநங்கையர்க்கான நலவாரியம், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சிகளுடன், சமூகத்தின் புழக்கத்தில் உள்ள 'அரவாணிகள்' என்கிற பெயரினை மாற்றும் முயற்சியைச் செய்தவரும் கலைஞரே. இது தொடர்பாக, சட்டப்பூர்வ வடிவங்கள் மூலம் திருநங்கைகள் / திருநம்பிகள் என அடையாளப்படுத்தினார். விண்ணப்பப் படிவங்களில் ஆண்/பெண் என்பதற்கு எவ்வாறு 'M/F (Male/Female)' என்று அச்சிடப்பட்டிருக்குமோ அதைப்போல, திருநங்கையர்களை (TRANSGENDER) குறிக்கும் வகையில், 'T' என்ற எழுத்தினை முதன்முதலில் குறிப்பிட்டது கலைஞரின் ஆட்சி.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் எடுக்கப்பட்ட இந்த முன்னெடுப்புதான் இந்தியாவுக்கே முன்மாதிரி. இதுகுறித்து 16-3-2008 அன்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளிதழ், *"Third Sex gets its due in T.N. - Karuna Govt. is Country's First to issue Ration Cards with 'T' as Gender"* என்ற தலைப்பில் பெரிதாக எழுதியிருந்தது. ஆனால், ஒன்றிய அரசு அதை உணர்ந்து கொள்வதற்கு காலம் பிடித்தது.

### மாநிலங்களவையில் மசோதா

2013-ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணிகள் நடந்தபோது, அந்தப் படிவத்தில் திருநங்கையர்களுக்கு 9 என்ற குறியீட்டு எண் வழங்கப்பட்டபோது, கலைஞரிடமிருந்து கடும் எதிர்ப்பு எழுந்தது. அந்தப் படிவத்தில் ஆண் என்பதற்கு 1 என்றும், பெண் என்பதற்கு 2 என்றும் குறிப்பிட்டு விட்டு, ஆண் பெண் அல்லாத பாலினப் பிரிவுக்கு 9 என்ற குறியீட்டு எண் பயன்படுத்தப்பட்டது. "ஏற்கனவே எங்களை அந்த 9 என்ற எண்ணைக் குறிப்பிட்டுத்தான் கிண்டல் செய்கிறார்கள், இப்போது அரசே எண்ணை குறிப்பிட்டிருப்பது எங்களை அவமானப்படுத்துவதாக உள்ளது" என திருநங்கைகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

> **சமூகத்தின் புழக்கத்தில் உள்ள 'அரவாணிகள்' என்கிற பெயரினை மாற்றும் முயற்சியைச் செய்தவரும் கலைஞரே.**

ஒன்றிய அரசின் இந்தப் பார்வையை மாற்றவும், கழகம்தான் முன் நின்றது. இது தொடர்பாக கலைஞர் அறிக்கை வெளியிட்டதுடன், ஒன்றிய அரசின் சட்ட வடிவங்களுக்கும் முனைப்பு கொடுத்தார். அதையடுத்து, 2014 -ஆம் ஆண்டில், மாநிலங்களவையில் கழகத்தின் உறுப்பினர், திருச்சி சிவா தாக்கல் செய்த, திருநங்கைகள் உரிமைகள் மசோதா ஏற்கப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

### தொடர் செயல்பாடு

திட்டத்தைத் தொடங்குவது மட்டுமல்ல, ஆட்சியில் இல்லையென்றாலும் அந்தத் திட்டம் எந்தத் திசையில் செல்கிறது என்பதை, கண்காணிப்பதைத் தனது கடமைகளில் ஒன்றாகவே செய்தவர் கலைஞர். அவருக்குப் பின் வரும் ஆட்சியர்கள் அந்தத் திட்டத்தை முடக்கும்போது அவரைப்போல வருத்தம் கொள்வோர் எவருமில்லை. திருநங்கைகள் நல வாரியத்திலும் இதுதான் நிகழ்ந்தது.


கலைஞர் கொண்டு வந்ததால் அதை முடக்க வேண்டும் என நினைக்கும் அ.தி.மு.க. ஆட்சியில் திருநங்கைகள் நல வாரியம் செயல்படவே இல்லை. 2015-2016 -ஆம் ஆண்டுக்கான சமூக நலத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பின் செயல் திட்டத்தின்படி திருநங்கைகள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கல்விக் கடன் போன்றவை வழங்கப்படவே இல்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கிடைத்த பதிலில், இரண்டு பேருக்கு மட்டுமே அந்தக் கடன் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது. கலைஞர் முன்னெடுத்ததால் திருநங்கை / திருநம்பி என்கிற பெயரையே மாற்றி, மூன்றாம் பாலினம் எனக் குறிப்பிடத் தொடங்கியது அ.தி.மு.க. அரசு. இது சமத்துவமற்ற சொல் என்பதை அறிந்துகொள்வதற்கு அவர்களிடம் ஆற்றல் இல்லை.

அப்போது, அது தொடர்பாக 2015-ஆம் ஆண்டு நவம்பர் 10- ஆம் தேதி 'தி இந்து' ஆங்கில நாளிதழ், மிகப் பெரிய அளவில் அரைப் பக்க அளவுக்குச் சிறப்புச் செய்தித் தொகுப்பு வெளியிட்டது. அதற்குத் தலைப்பே, நாட்டிற்கே முன்மாதிரியாக இருந்த நல வாரியம், முடக்கப்பட்டுள்ளது என்றது. *(Transgender Welfare Board in a limbo - Once a model for the country, the Board has been inactive for the past few years: former members-* உறுதியற்ற நிலையில் அரவாணிகள் நல வாரியம் - ஒரு காலத்தில் நாட்டுக்கே முன்மாதிரியாக இருந்தது - கடந்த சில ஆண்டுகளாக வாரியம் செயல்படாமல் உள்ளது)

இந்தக் கட்டுரையைக் குறிப்பிட்டும் அரசுக்கு அழுத்தம் கொடுத்தார் கலைஞர். இப்படித் தனது காலம் வரை சமத்துவத்துக்கும், ஒடுக்கப்பட்டவர்களின் உத்தரவாதமான வாழ்க்கைக்கும் ஒளியாக நின்றவர் கலைஞர். அந்த ஒளிதான் விடியல் அரசின் ஆதாரம்.

...வலம் வருவோம்

## நூற்றாண்டுக்கு வலு சேர்க்கும் நூல்!





**க**லைஞரை அறிந்துகொள்ள ஓராயிரம் நூல்கள் வரிசையில், வாசகர்கள் மொழியில் எழுதப்பட்ட நூலாகத் தனித்துத் தெரிகிறது **'திராவிடத் திருமகன்'** நூல்.

69 தலைப்புகளின் கீழ், சிறு சிறு குறிப்புகள் போல எழுதப்பட்ட தகவல்கள் எளிதாக வாசிக்கவும், எடுத்துக் கையாளவும் பயன்படும் வகையில் உள்ளன. கலைஞரின் எழுத்துகள், ஆட்சிப் பணித் திட்டங்கள், அரசியல் வாழ்க்கை என அவரின் 80 ஆண்டு கால பொது வாழ்க்கை குறித்த இந்தத் திரட்டு நூலை எழுதியவர் வானம்பாடி வெ.சுப்பிரமணியன். சேலம், ஆத்தூரைச் சேர்ந்த 'தமிழினி பதிப்பகம்' வெளியிட்டுள்ளது.

கலைஞரின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை உயர்த்திப் பிடிக்க வலுசேர்க்கிறது இந்த நூல். வாசித்து மகிழ்வோம்.

## :.ப்ளாஷ்பேக்



இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## ஆறுதலும் ஊக்கமும்!



சேதுராமன்

**எ**னக்கு விவரம் தெரிந்த வயதிலிருந்து, இன்று வரை 56 ஆண்டுகள் கழகப் பணியாற்றி வருகிறேன். 1994-ஆம் ஆண்டு கழகம் சந்தித்த நெருக்கடியின் போது இன்றைய கழகத் தலைவரும் அன்றைய இளைஞர் அணி செயலாளருமான தளபதி அவர்களை தேனாம்பேட்டை அன்பகம் அலுவலகத்தில் சென்று சந்தித்து ஆதரவைத் தெரிவித்தோம். என்னுடன் அன்றைய ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் திரு கோ.தளபதி அவர்களும் உடனிருந்தார். அந்த சந்திப்பின்போது தளபதி அவர்கள் "கழகம் கட்டுக்கோப்பாக இருக்க எத்தகைய தியாகத்தையும் செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும்" என்று ஆறுதல் வார்த்தைகளைக் கூறி ஊக்கமளித்தார்..

**-எஸ்.சேதுராமன், மாநில துணைச் செயலாளர், விவசாயத் தொழிலாளர் அணி, மதுரை.**

## கருவூலம்

### புதுவை அரசியல் மாற்றம்!

**1967-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றம், 1969-ஆம் ஆண்டு புதுச்சேரியிலும் ஏற்பட்டது. அதற்கு, முன் 'காலையில் ஒரு முதல்வர் – மாலையில் ஒரு முதல்வர்' என நிலையற்ற ஆட்சி நீடித்து வந்தது. அந்த நிலையில், முதல் முறையாக, புதுவையில் நிலையான ஆட்சியைத் தந்தது கழகம் – கம்யூனிஸ்ட் கூட்டணி ஆட்சி. இந்த வெற்றிக்கு இந்திய முஸ்லிம் லீக் துணை நின்றது. கழகத்தைச் சேர்ந்த எம்.ஓ.ஹெச்.பரூக் முதல்வராகப் பொறுப்பேற்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 226





எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.